பக்கங்கள்:-25

# காலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவர் ஆண்டு 2056 | மாசி 13 | செவ்வாய்க்கிழமை | 25.02.2025 | அதிர்வு 205

## தமிழர்கள் பிச்சை எடுக்க ஒருபோதும் தயார் இல்லை

### அரசை கடுமையாக சாடிய அர்ச்சுனா எம்.பி.

(விரிவான செய்தி 5 ஆம் பக்கத்தில்)





# புதிய அரசமைப்பை நாம் உருவாக்கியே தீருவோம்

## அதுவரை 13 ஆவது திருத்தம் மாற்றம் எதுவும் இன்றி அமுலில் இருக்கும் என்று அநுர அரசு உறுதியளிப்பு

தேர்தல் காலத்தில் நாம் வழங்கிய வாக்குறுதிக்கமைய புதிய அரசமைப்பை உருவாக்குவோம் என்று ஆளும் தரப்பின் பிரதம கொறடாவும் சுகாதார அமைச்சருமான நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

06

# கனேமுல்ல சஞ்சீவ படுகொலையுடன் பதில் பொலிஸ்மா அதிபருக்கும் தொடர்பு?

## உதய கம்மன்பில சந்தேகம்



“பாதாள உலகக் குழுக்களின் தலைவர்களில் ஒருவரான கனேமுல்ல சஞ்சீவ படுகொலையுடன் பதில் பொலிஸ்மா அதிபர் பிரியந்த வீரசூரியவுக்கும் தொடர்பிருக்கின்றதா என்ற சந்தேகம் எழுகின்றது. எனவே, தகவல் கிடைத்திருந்தும் உரிய நடவடிக்கை எடுக்கத் தவறி பதில் பொலிஸ்மா அதிபர் தொடர்பில் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ரவி செனவிரத்ன நடவடிக்கை எடுப்பாரா?”

– இவ்வாறு பிவிதுரு ஹெல உறுமயவின் தலைவர் உதய கம்மன்பில கேள்வி எழுப்பினார்.

06




ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி இரண்டு தினங்களுக்கு முன்னர் இணுவிலில் நடத்திய கூட்டத்தின் பின்னர், எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தலின் போது தங்களுடன் இணைந்து செயற்படுவதற்கு ஒன்பது கட்சிகள் இணங்கியுள்ளன என்று ஆரவாரமாக அறிவிப்பு விடுக்கப்பட்டது.

ஆனால், அந்த இணக்கத்தில் இப்போது பிணக்கு ஏற்பட்டிருப்பதாகச் சில வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

குறிப்பாக, அந்த உத்தேசக் கூட்டில் சந்திரகுமார் தலைமையிலான சமத்துவக் கட்சியைச் சேர்ப்பதற்கு எதிராக தமிழ் தேசியப் பசுமை இயக்கம், தமிழ் மக்கள் கூட்டணி, ஜனநாயகத் தமிழரசுக் கட்சி ஆகிய தரப்புகள் சீற்றத்துடன் கிளர்ந்துள்ளன என்று தெரிகிறது. அதனால் அந்த உத்தேசக் கூட்டில் இருந்து இந்த மூன்று தரப்புக்களும் ஜாகா வாங்கினாலும் ஆச்சரியப்படுவதற்கு இல்லை.

எது, எப்படி என்றாலும் நாளை கொக்குவிலில் மணிவண்ணனின் அலுவலகத்தில்

06





## கனேமுல்ல சஞ்சீவ படுகொலை சந்தேகநபர்

# செவ்வந்தியின் புதிய புகைப்படங்களை வெளியிட்டு பொதுமக்களின் உதவியை நாடியுள்ள பொலிஸார்

பாதாள உலகக் குழுக்களின் தலைவர்களில் ஒருவரான கனேமுல்ல சஞ்சீவ என்பவரைச் சுட்டுப் படுகொலை செய்வதற்குக் கொழும்பு, புதுக்கடை நீதிமன்றத்துக்குள் சட்டத்தரணி வேடத்தில் சென்று துப்பாக்கிதாரிக்கு உதவி செய்தார் எனக் கூறப்படும் பெண் சந்தேகநபரான செவ்வந்தியின் புதிய புகைப்படங்களைக் கொழும்பு பொலிஸ் குற்றத் தடுப்புப் பிரிவினர் வெளியிட்டுள்ளதுடன் அவரைக் கைது செய்யப் பொதுமக்களின் உதவியையும் நாடியுள்ளனர்.

பெண் சந்தேகநபர், இல. 243/01, நீர்கொழும்பு வீதி, ஜய மாவத்தை, கட்டுவெல்லேகம என்ற முகவரியில் வசிக்கும் 25 வயதான பிங்புர தேவகே இஷாரா செவ்வந்தி என அடையாளம் காணப்பட்டுள்ளார். அவரது தேசிய அடையாள அட்டை எண் 995892480 ஆகும்.

சட்டத்தரணி போல் நடித்த செவ்வந்தி, நீதிமன்ற வளாகத்துக்குள் ஒரு ரிவால்வரை கடத்தி வந்து கொலையில் ஈடுபட்ட துப்பாக்கிதாரியிடம் ஒப்படைத்தார் என்று விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

சந்தேகநபரின் இருப்பிடம் குறித்து தகவல் தெரிந்தவர்கள், கொழும்பு பொலிஸ் குற்றத் தடுப்புப் பிரிவின் 071 - 8591727 அல்லது 071 - 8591735 என்ற தொலைபேசி இலக்கங்களுக்குத் தொடர்பு கொள்ளுமாறு பொலிஸார் கேட்டுள்ளனர்.

சந்தேகநபரைக் கைது செய்வதற்கு வழிவகுக்கும் துல்லியமான தகவல்களை வழங்குபவர்களுக்கு ரொக்கப் பரிசு வழங்கவும் பதில் பொலிஸ்மா அதிபர் பிரியந்த வீரசூரிய முடிவு செய்துள்ளார் என்று பொலிஸ் பிரிவு தெரிவித்துள்ளது.

அத்தகைய தகவல்களை வழங்குபவர்களின் அடையாளம் கண்டிப்பாக இரகசியமாக வைக்கப்படும் என்றும் பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர்.





# மாணவர்களுக்கான கல்விச் சுமைகளை குறைப்பதற்கான திட்டம் முன்னெடுப்பு



தரம் ஒன்று மற்றும் தரம் 6 இற்கான பாடத்திட்டங்களின் உள்ளடக்கங்களில் மாற்றம் செய்வதற்கான வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவித்துள்ளார்.

அநுராதபுரத்தில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கருத்து ரைக்கையிலே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன். இந்த வேலைத்திட்டத்தினை 2026ஆம் ஆண்டு முதல் நடைமுறைப்படுத்துவதற்கு எதிர்பார்த் துள்ளதாகவும் பிரதமர் இதன்போது தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"ஏனைய தரங்களில் பயிலும் மாணவர்களுக்கான கல்விச் சுமைகளைக் குறைப்பதற்கான திட்டங்கள் வகுக்கப் பட்டுள்ளன.

பரீட்சை முறைமைகளில் எவ்வித மாற்றமும் ஏற்படாது.

பாடத்திட்டத்தின் உள்ளடக்கங்களில் மாத்திரம் மாற்றங் களை மேற்கொள்வதற்கு எதிர்பார்த்துள்ளோம்.

தற்போதைய பாடத்திட்ட உள்ளடக்கங்களானது, 21 ஆம் நூற்றாண்டிற்குப் பொருத்தமானதாக அமைந்திருந்தாலும், சில விடயங்கள் தொடர்பில் ஆசிரியர்களுக்கான பயிற்சி போதுமானதாக இல்லை.

இதன் காரணமாக மாணவர்களுக்கும் ஆசிரி யர்களுக்கும் இடையில் பாரிய இடைவெளி ஏற்பட்டுள் ளது.

இதனை நிவர்த்திக்கும் வகையில் எதிர்காலத்தில் ஆசிரி யர்களுக்குப் பயிற்சிகளை வழங்கும் வகையில் வேலைத் திட்டங்களை முன்னெடுப்பதற்குத் திட்டமிட்டுள்ளோம்." என்றார்.

# குறைந்த வருமானம் பெறுபவர்களுக்கு நிவாரண பொதி வழங்க நடவடிக்கை



எதிர்வரும் சிங்கள மற்றும் தமிழ்ப் புத்தாண்டை முன் னிட்டு குறைந்த வருமானம் பெறுபவர்களுக்கு அத்தியாவ சிய உணவுப் பொருட்கள் அடங்கிய நிவாரணப் பொதி யொன்றை வழங்குவது தொடர்பில் அரசாங்கம் கவனம் செலுத்தியுள்ளது.

உணவு பாதுகாப்பை உறுதி செய்வது தொடர்பான கொள்கை முடிவுகளை எடுப்பதற்காக விவசாய கால்நடை, காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சர் கே.டி. லால்காந்த மற்றும் வர்த்தகம், வாணிப, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சர் வசந்த சமரசிங்க மற்றும் உணவுக் கொள்கை மற்றும் உணவு பாதுகாப்புக் குழு உறுப்பினர்கள் நேற்று மூன்றாவது முறையாக நாடாளுமன்ற வளாகத் தில் கூடியபோது, இது தொடர்பில் கவனம் செலுத்தப்பட் டது.

சிங்கள, தமிழ்ப் புத்தாண்டு காலத்தில் அத்தியாவசிய உணவுப் பொருட்களுக்குத் தட்டுப்பாடு ஏற்படாமல் பார்த்துக் கொள்வது மற்றும் அந்தப் பொருட்களின் விலைகளைக் கட்டுப்பாட்டில் வைத்திருப்பது என்பன குறித்து இதன்போது கவனம் செலுத்தப்பட்டது.

இந்த ஆண்டு வரவுசெலவுத் திட்டத்தில் பண்டிகைக் காலத் தில் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு மானிய விலையில் அத்தியாவசிய உணவுப் பொருட்களை வழங்க ஒரு பில்லியன் ரூபாய் ஒதுக்க முன்மொழியப்பட்டுள்ளதோடு இது குறித்து இங்கு விரிவாக ஆராயப்பட்டது.

சந்தையில் அத்தியாவசியப் பொருள்களின் விலை ஏற்ற இறக்கங்களைக் குறைந்தபட்ச அளவில் பராமரிப்பது மற்றும் வெதுப்பக பொருள்களின் விலைகளைக் குறைப்பது குறித்தும் இங்கு கலந்துரையாடப்பட்டது.





# சட்டவிரோத கோடாவுடன் இளைஞன் ஒருவர் கைது

(பா.சதீசன்)

முத்தையங்கட்டு இடதுகரை பேராற்று பகுதியில் கசிப்பு உற்பத்திக்கு தயாராக இருந்த கோடா 50 ஆயிரத்து 600 மில்லி லீற்றருடன் இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

முத்தையங்கட்டு இடதுகரை பேராற்று பகுதியில் சட்டவிரோத கசிப்பு உற்பத்தி, விற்பனை இடம்பெறுவதாக ஒட்டிசுட்டான் பொலிஸ் நிலைய பெரும் குற்றத்தடுப்பு பிரிவு பொறுப்பதிகாரி ரி.சுபேசனுக்கு தகவல் கிடைத்துள்ளது.

இந்த தகவலையடுத்து நேற்று முன்தினம் மாலை மேற்படி இடத்திற்கு சென்ற ஒட்டிசுட்டான் பொலிஸ் நிலைய பெரும் குற்றத்தடுப்பு பிரிவு பொறுப்பதிகாரி தலைமையிலான பொலிஸார் மேற்கொண்ட சுற்றிவளைப்பில் உற்பத்திக்கு தயாராக இருந்த கசிப்பு கோடா 50 ஆயிரத்து 600 மில்லிலீற்றர் கைப்பற்றப்பட்டுள்ளது.

அத்தோடு சட்டவிரோத கசிப்பு உற்பத்திக்கான கோடா வைத்திருந்த குற்றச்சாட்டில் இளைஞன் ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட இளைஞன் 24 வயதுடைய முத்தையங்கட்டு இடதுகரையை சேர்ந்தவர் என்பதும் முதல்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.








# ஜனாதிபதி ஊடக ஆலோசகராக சந்தன சூரிய பண்டார நியமனம்





ஜனாதிபதி ஊடக ஆலோசகராக ஊடகவியலாளர் சந்தன சூரிய பண்டார நியமிக்கப்பட்டுள்ளார். ஜனாதிபதி ஊடகப் பிரிவின் சர்வதேச ஊடக மற்றும் மூலோபாய தொடர்பாடல் பணிப்பாளராக அநுருத்த லொகுஹபு ஆரச்சியும் நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர்கள்நேற்று பிற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் ஜனாதிபதி செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்கவிடமிருந்து தமது நியமனக் கடிதங்களைப் பெற்றுக் கொண்டனர்.

பிரபல ஊடகவியலாளரான சந்தன சூரிய பண்டார 30 வருடங்களுக்கு மேலாக இலங்கை ஊடகத்துறையில் குறிப்பிடத்தக்க பங்காற்றி வருகிறார்.

உள்நாட்டு ஊடக புகைப்படத்துறையில் குறிப்பிடத்தக்க சேவையாற்றியுள்ள அநுருத்த லொகுஹபு ஆரச்சி, சர்வதேச ரொய்டர் செய்திச் சேவையில் இரண்டு தசாப்தங்களுக்கு மேலாக சேவையாற்றி டிஜிட்டல் புகைப்படத்துறையை நாட்டுக்கு அறிமுகம் செய்துள்ளார்.

# தமிழர்கள் பிச்சை எடுக்க ஒருபோதும் தயார் இல்லை

## சபையில் அரசைக் கடுமையாகச் சாடிய அர்ச்சுனா எம்.பி.
## பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்குமாறும் வலியுறுத்து



“வரவு – செலவுத் திட்டத்தில் வடக்கு மற்றும் கிழக்குக்கு நிதி ஒதுக்கீடு என்ற பெயரில் பிச்சையளிக்கப்பட்டுள்ளது. தமிழர்கள் பிச்சை எடுப்பதற்குத் தயாராக இல்லை என்பதனை உங்களுக்குச் சொல்லுகின்றேன். எமது சகோதரர்கள் வெளிநாடுகளில் இருக்கின்றார்கள். பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்குங்கள். நாங்கள் பில்லியன், ரில்லியன் கணக்கான நிதியைக் கொண்டு வருகின்றோம். பிச்சை போடுகின்றோம். தலதா மாளிகைக்குக் குண்டுவைத்த ரோஹன விஜேவீர பயங்கரவாதியல்ல. ஆனால், எமது தலைவர்பிரபாகரனைப் பயங்கரவாதி என்பீர்கள். ஏனெனில் நாங்கள் தமிழர்கள்.”

– இவ்வாறு யாழ்ப்பாணம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இராமநாதன் அர்ச்சுனா கடுமையாகச் சாடினார்.

நாடாளுமன்றத்தில் நேற்று திங்கட்கிழமை நடைபெற்ற 2025 ஆம் ஆண்டுக்கான வரவு – செலவுத் திட்டத்தின் 6 ஆம் நாள் விவாதத்தில் உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் உரையாற்றியதாவது,

“வரவு – செலவுத் திட்டத்தில் வடக்குக்கு ஏதோ பெரிதாக ஒதுக்கி விட்டதாகக் கூறுகின்றீர்கள். யாழ். நூலகத்துக்கு 100 மில்லியன் ரூபா ஒதுக்கியுள்ளீர்கள். இது வரவு – செலவுத் திட்ட மொத்த நிதி ஒதுக்கீட்டில் 0.0076வீதமாகும். பிச்சை போடுவது போன்று யாழ். நூலகத்துக்கு ஒதுக்கியுள்ளீர்கள்.

பரவாயில்லை அடுத்ததைப் பார்ப்போம். வடக்கு வீதிகள் அபிவிருத்திக்கென 5000 மில்லியன் ரூபாவையோ, ஒதுக்கியுள்ளீர்கள். இது வரவு – செலவுத் திட்ட மொத்த நிதி ஒதுக்கீட்டில் 0.38 வீதம். இதுவும் ஒரு பிச்சை. தமிழனுக்கு நீங்கள் போட்ட பிச்சை. அதையும் விடுவோம்.

வடக்கு, கிழக்கில் 35 ஆண்டுகள் பெரும் போர் இடம் பெற்றது. இந்தப் போரில் நான் உட்பட எனது உறவுகள் வீடுகளை இழந்தனர். ஆனால், வடக்கு, கிழக்கில் வீடுகளைப் புனரமைக்க 1500 மில்லியன் ரூபா மாத்திரமே ஒதுக்கப்பட்டுள்ளது. இது வரவு – செலவுத் திட்ட மொத்த நிதி ஒதுக்கீட்டில் 0.01 வீதம். எமது வீடுகளை இடித்து எமது காணிகளைப் பிடித்து எங்களில் 45000 பேரைக் கொலை செய்துவிட்டு நீங்கள் எங்களுக்குப் போடும் பிச்சை இது.

இன்னொரு விடயத்தையும் கூறுகின்றேன். வட்டுவாகல் பாலம் அமைக்க 1000 மில்லியன் ரூபா தந்துள்ளதாகக் கதைக்கின்றார்கள். இது வரவு – செலவுத் திட்ட மொத்த நிதி ஒதுக்கீட்டில் 0.076 வீதமாகும். இந்தப் பிச்சைக்கும் நன்றி.

அத்துடன் சுகாதாரத்துறையிலாவது எங்களுக்கு ஏதாவது பிச்சை போட்டுள்ளீர்களா என்று பார்த்தால் மொத்தமாக 382 பில்லியன் ரூபா ஒதுக்கிவிட்டு வடக்குக்கு நீங்கள் தந்திருப்பது 0.66 வீதமாகும். உங்கள் பிச்சை எந்தளவுக்கு உள்ளது என்பதனை இதில் பார்த்துக்கொள்ளுங்கள். கிழக்குக்கு நீங்கள் போட்டுள்ள பிச்சை 0.8.வீதமேயாகும்.

தமிழர்கள் பிச்சை எடுப்பதற்குத் தயராக இல்லை என்பதனை உங்களுக்குச் சொல்லுகின்றேன். எனது சகோதரர்கள் வெளிநாடுகளில் இருக்கின்றார்கள். முடிந்தால் நீங்கள் பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்குங்கள். நாங்கள் உங்களுக்கு பில்லியன், ரில்லியன் கணக்கான பணத்தைக் கொண்டு வருகின்றோம். நாங்கள் உங்களுக்குப் பிச்சை போடுகின்றோம்.

சீனாவிடமும் இந்தியாவிடமும் நீங்கள் பிச்சை எடுத்துவிட்டு அதில் எங்களுக்கு 0.01 வீதத்தை பிச்சை போடுவீர்கள். ஜனாதிபதி வந்து நாங்கள் வடக்குக்குப் பெரும் நிதி ஒதுக்கியுள்ளோம் என்று கூறுவாராம். இது பிச்சையிலும் பிச்சை. எடுப்பானாம் ஆண்டி பிச்சை. அதற்குப் பிறகு போடுவானாம் ஒரு பிச்சை. இது ஒரு கேவலமான செயல் என்றே குறிப்பிடுகின்றேன்.

யாழ்ப்பாணத்தில் இண்டஸ்ரியல் பார்க் நிர்மாணிக்க போகின்றார்களாம். 3 இடங்களிலாம். அதில் 300 இருக்கின்றதாம். கைத்தொழில்துறைக்கு நீங்கள் மொத்தமாக ஒதுக்கிய மொத்த செலவீனத்தில் 1.54 வீதம். கே.கே.எஸ்.ஸை நாங்கள் கட்டுவோம். தமிழன் கட்டுகின்றான் கே.கே.எஸ்.ஸை. முடிந்தால் கே.கே.எஸ்.ஸை எங்களிடம் தாருங்கள். நாங்கள் உங்களுக்குச் சீமெந்து தருகின்றோம். வடக்கு, கிழக்கிலிருந்து நான் உங்களுக்கு எல்லாம் தந்தோம். ஆனால், நீங்கள் எமது உதிரங்களை எடுத்துவிட்டு இப்போது 0.00 அளவில் பிச்சை போடுகின்றீர்கள்.

இந்தப் பிச்சைதான் உங்களின் பட்ஜட். அதற்காகத்தான் நாம் வாக்களித்தோம். எனது தமிழ் மண் பிழையாகப் போட்ட 3 பேருக்கான வாக்குகளினால் பத்திரிகை வாசிக்கத் தெரியாதவர்கள் வந்துள்ளார்கள். ஏனெனில் 13 இல் அநுரகுமார திஸாநாயக்க எங்களுக்கு ஏதாவது செய்வார் என்று எமது மக்கள் வைத்த நம்பிக்கை கொண்டார்கள்.

நான் சிங்களர்களுக்கு எதிரானவன் அல்லன். ஆனால், இங்கு என்னை எதிரியாகவே பார்த்தார்கள். ஆளும் தரப்புக்கும், எதிர்க்கட்சிக்குமான சண்டையில் நாங்கள்தான் அவதிப்படுகின்றோம்.

யாழ் மாவட்ட அரச அதிபரின் மகன் அரச வாகனத்தைக் கொண்டுபோய் மோதி உடைத்துள்ளார். இந்நிலையில், அரச அதிபர் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான நிதியில் 56 மில்லியன் ரூபாவில் 35 மில்லியன் ரூபாவை எடுக்கப்போகின்றாராம். அப்படியானால் நாங்கள் என்ன தேங்காய்களா? அரசியல் கைதிகளை விடுவிப்பதாக ஜனாதிபதி கூறினார். ஆனால், நீதி அமைச்சர் அரசியல் கைதிகள் இல்லை, இருந்தால் பட்டியல் தாருங்கள் என்று கேட்கின்றார். இது கேவலம். கேவலம்,

எமது தீவகத்தில் குடிப்பதற்கு நீரின்றி எமது சமூகம் இறந்து கொண்டிருக்கின்றது. ஆனால், தெற்குக்கு 61234 மில்லியனை நீர் வழங்கலுக்கு ஒதுக்கியுள்ளீர்கள். அதனை விட மேலதிகமாகவும் 20000 மில்லியன் ரூபாவை ஒதுக்கியுள்ளீர்கள். ஆனால், வடக்குக்குத் தண்ணீர் இல்லை. உங்களுக்கு எமது மக்களின் வலிகள் தெரியாது.

தலதா மாளிகைக்குக் குண்டு வைத்த ரோஹன விஜேவீர பயங்கரவாதியல்ல. ஆனால், எமது தலைவர் பிரபாகரன் பயங்கரவாதி. இதுதான் உங்கள் சிந்தனை. அதற்குக் காரணம் நாங்கள் தமிழர்கள். கிளீன் ஸ்ரீலங்கா செயலணியில் ஒரு தமிழன், முஸ்லிம் இருக்கின்றார்களா? இல்லை இதுதான் உங்கள் நல்லிணக்கம். இவற்றைச் சொன்னால் நாங்கள் மோசமானவர்கள். அரசுடன் டீல் வைத்துக்கொள்ளும் தமிழ்ப் பிரதிநிதிகள் நல்லவர்கள் என்பார்கள்.” – என்று அரசைக் கடுமையாகச் சாடினார் அர்ச்சுனா எம்.பி.

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இந்தத் தரப்புக்கள் அனைத்தும் மீண்டும் கூடிப் பேச இருக்கின்றன. அப்போது இவ்விடயம் தீர்க்கமாக ஆராயப்படும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

நேற்று என்னுடைய குறிப்பில், நேற்று முன்தினம் ஞாயிறன்று இலங்கைத் தமிழரசு கட்சியின் பதில் தலைவர் சி.வி.கே.சிவஞானம் ரெலோவினுடைய தலைவர் செல்வம் அடைக்கலநாதன் எம்.பியைச் சந்திக்க முடியாத சூழலில் தொலைபேசியில் விரிவாகப் பேசினார் என குறிப்பிட்டு இருந்தேன். அது தவறு. காலையில் அவர்கள் சந்திப்பு இடம் பெறாத போதிலும், ஞாயிறு மாலை மன்னாரில் செல்வம் அடைக்கலநாதன் எம்.பியின் அலுவலகத்தில் அவரை நேரில் சந்தித்துப் பேசி இருக்கிறார் சிவஞானம்.

ரெலோ, புளொட், ஈ.பி.ஆர்.எல்.எவ். ஆகிய மூன்றுடனும் தமிழரசுக் கட்சி பேசி, ஓர் இணக்கத்தைக் கண்ட பின்னர் அடுத்த கட்டம் குறித்து யோசிக்கலாம் என்று தாம் ஒரு யோசனையை அந்த மூன்று கட்சிகளின் தலைவர்களிடமும் வைத்திருந்தார் என்றும், ஆனால் அதற்கு இடையில் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி சார்பில் தேர்தலுக்கான புதிய கூட்டு பற்றிய அறிவித்தல் வந்து விட்டதால் இந்த மூன்று கட்சிகளோடும் இனி தேர்தல் கூட்டுக் குறித்து பேசுவதில் அர்த்தமில்லை என்றும் தம்முடைய கட்சியினருக்கு தகவல் வெளியிட்டிருக்கிறார் தமிழரசுத் தலைவர் சி.வி.கே.சிவஞானம்.

"ஒன்றுபட்ட கூட்டணியை உருவாக்க நாங்கள் அந்த மூன்று கட்சியினருடனும் பேச முயன்றோம். அதற்கு முன்னர் அவர்கள் கூட்டணி பற்றி அறிவித்து விட்டார்கள். இனி, தேர்தலின் பின்னர் நாங்கள் செயல்படக்கூடிய முறைமை குறித்துத்தான் அந்தத் தரப்பினருடன் பேசி உடன்பாடு காண முடியும், காண வேண்டும்" - என்றார் சிவஞானம்.

அது குறித்து பெரும்பாலும் இந்த நான்கு கட்சிகளினதும் தலைவர்கள் - அதாவது தமிழரசு, ரெலோ, புளொட், ஈ.பி.ஆர்.எல்.எவ். ஆகியவற்றின் தலைவர்கள் - வரும் ஞாயிற்றுக்கிழமை மாலை யாழ்ப்பாணத்தில் சந்தித்துத் தேர்தலின் பின்னரான ஏற்பாடுகள் குறித்து உடன்பாட்டை காணக் கூடும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

தேர்தல் இன்னும் அறிவிக்கப்படாத சூழலில் தமிழர் தேசிய தரப்புகளுக்கு இடையில் புதிய கூட்டுக்கள் உருவாவதற்கான வாய்ப்புகள் பல மட்டங்களில் ஆராயப்படுவதாகத் தெரிகின்றது.

வரும் வாரத்தில் புதிய பல விடயங்கள் கட்டவிழும் என நம்பிக்கையோடு எதிர்பார்க்கலாம்.

\+ \+ \+

வரவு - செலவுத் திட்டத்தை ஒட்டி எதிர்க்கட்சிகள் எடுக்க வேண்டிய நிலைப்பாடு பற்றி ஆராய்வதற்காக நேற்று மாலை நடைபெற்ற எதிர்க்கட்சிகளின் பிரதிநிதிகளின் கூட்டத்தில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்றக் குழு தலைவர் ஸ்ரீதரன் மற்றும் ஸ்ரீநேசன் ஆகியோருடன் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவும் வேறு இரண்டொரு தலைவர்களும் கடுமையாக முரண்பட்டனர் என்று ஒரு தகவல் கிடைத்தது. அது பற்றிய விடயத்தை நாளை விவரமாகப் பார்ப்போம்.

\+ \+ \+

லஞ்சம், ஊழல் குற்றச்சாட்டுக்கள் குறித்து விசாரணை நடத்தும் ஆணைக் குழுவின் இயக்குநர் நாயகமாக மேல் நீதிமன்ற நீதிபதி ரங்க சிறிநாத் அபேவிக்ரம திஸநாயக்க நியமிக்கப்பட்டமையை ஆட்சேபித்து அரசமைப்புக் கவுன்ஸிலில் உள்ள மூன்று சிவில் சமூகப் பிரதிநிதிகளும் உயர்நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்திருக்கின்றார்கள் என்று தெரிய வருகின்றது.

அடுத்து வரும் நாள்களில் இந்த வழக்கு உயர் நீதிமன்றத்தில் எடுத்துக் கொள்ளப்படும் போது மனுதாரர்களான அந்த மூன்று சிவில் சமூக பிரதிநிதிகள் சார்பிலும் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் முன்னிலையாவார் என்று தெரிய வருகின்றது.

அரசமைப்புக் கவுன்ஸிலில் எதிர்க்கட்சிகள் தரப்பில் இடம்பெற்றுள்ள இலங்கைத் தமிழரசுக் கட்சி நாடாளுமன்றக் குழு தலைவர் சிறிதரன் இந்த நியமனம் தொடர்பான வாக்கெடுப்பில் ஆளும் தரப்போடு சேர்ந்து வாக்களித்த காரணத்தால் நீதிபதி ரங்க சிறிநாத் அபேவிக்ரம திஸநாயக்க இந்த பதவிக்கு ஐந்துக்கு நான்கு வாக்குகள் என்ற வித்தியாசத்தில் தேர்வானார் என்பதும், அந்த வாக்கெடுப்பின்போது தாம் பிழையாக வழிநடத்தப்பட்டார் எனத் தெரிவித்து சிவில் சமூகப் பிரதிநிதிகள் மூவரில் ஒருவர் ஜனாதிபதிக்கு ஏற்கனவே கடிதம் எழுதியிருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கவை.

இந்த வழக்கு விசாரணைக்கு ஏற்றுக் கொள்ளப்பட்டால் இந்த விடயங்கள் விவரமாக நீதிமன்றத்தில் ஆராயப்படும் என்பது குறிப்பிடத்தக்கது.

- - - - - - - - - - - - - - - -

## புதிய அரசமைப்பை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நாடாளுமன்றத்தில் நேற்று திங்கட்கிழமை நடைபெற்ற 2025 ஆம் ஆண்டுக்கானவரவு-செலவுத்திட்டத்தின்6ஆம்நாள் விவாதத்தில் உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் உரையாற்றுகையில், "பொருளாதாரப் பாதிப்புக்கு மத்தியில்தான் ஜனாதிபதி வரவு - செலவுத் திட்டத்தை முன்வைத்துள்ளார். இந்த வரவு - செலவுத் திட்டம் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடையது, சர்வதேச நாணய நிதியத்தினுடையது என்று எதிர்க்கட்சிகள் குற்றஞ்சாட்டுகின்றார்கள். அத்துடன் வரவு - செலவுத் திட்டத்துக்குப் பல பெயர்களையும் சூட்டுகின்றார்கள். மக்களுக்குப் பயனுடையதாக அமைந்தால் வேண்டிய பெயரை எதிர்க்கட்சிகள் பாதீட்டுக்குச் சூட்டிக்கொள்ளட்டும்.

நாட்டு மக்களின் நலனைக் கருத்தில் கொண்டு வரவு - செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இந்த வரவு - செலவுத் திட்டத்தில் அனைத்து மக்களும் உள்வாங்கப்பட்டுள்ளார்கள். பொருளாதாரத்துக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் நிவாரண வழங்கலுக்கான முன்மொழிவுகள் முன்வைக்கப்பட்டுள்ளன. எந்தத் தரப்பினரும் புறக்கணிக்கப்படவில்லை.

வரவு - செலவுத் திட்டத்தில் புதிய அரசமைப்பு தொடர்பில் குறிப்பிடப்படவில்லை என்று குற்றஞ்சாட்டப்படுகின்றது. ஜனாதிபதித் தேர்தலிலும், நாடாளுமன்றத் தேர்தலிலும் புதிய அரசமைப்பு உருவாக்கம் தொடர்பில் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளோம்.

புதிய அரசமைப்பு ஒன்று உருவாக்கப்படும் வரை அரசமைப்பின் 13 ஆவது திருத்தம் எவ்வித மாற்றமும் இல்லாத வகையில் செயற்படுத்தப்படும். சிறந்த வாய்ப்பு கிடைக்கப் பெறும் முதல் சந்தர்ப்பத்தில் பொதுமக்களின் அபிப்ராயங்களுக்கும், நாடாளுமன்ற ஆலோசனைக்கும் போதுமான கால அவகாசம் வழங்கப்பட்டு புதிய அரசமைப்பை உருவாக்குவோம். அதற்குத் தயாராகவே உள்ளோம்.

புதிய அரசமைப்பு உருவாக்கத்துக்கு முன்னர் பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்திக்கொள்ள வேண்டும். அப்போதுதான் புதிய அரசமைப்பைச் சிறந்த முறையில் இயற்ற முடியும். ஆகவே, தேர்தல் காலத்தில் வழங்கிய வாக்குறுதிக்கமைய புதிய அரசமைப்பை உருவாக்குவோம்.

அரச சேவையாளர்களுக்கு சம்பளம் அதிகரிக்கப்பட்டுள்ளது. சுகாதாரத் துறைக்கு அதிக நிதி இம்முறை ஒதுக்கப்பட்டுள்ளது. ஒட்டுமொத்த அரச சேவையாளர்களின் சம்பளம் 80 சதவீதத்தால் வளர்ச்சி பெறும். வரவு - செலவுத் திட்டத்தின் முன்மொழிவுகள் செயற்படுத்தப்படும் என்ற அச்சத்தில்தான் எதிர்க்கட்சிகள் போலியான குற்றச்சாட்டுக்களை முன்வைக்கின்றன." - என்றார்.

- - - - - - - - - - - - - - - -

## கனேமுல்ல சஞ்சீவ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பிவிதுரு ஹெல உறுமய அலுவலகத்தில் நேற்று திங்கட்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் இவ்வாறு கேள்வி எழுப்பிய அவர் மேலும் குறிப்பிடுகையில்,

"கனேமுல்ல சஞ்சீவ மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டமைக்கு முதல் வாரம் கம்பஹா நீதிமன்றத்தில் அவர் முன்னிலைப்படுத்தப்படவிருந்த போது அவர் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்படவிருந்ததாகத் தனக்குத் தகவல் ஒன்று கிடைத்ததாகப் பதில் பொலிஸ்மா அதிபர் பிரியந்த வீரசூரிய தெரிவித்துள்ளார்.

அதன் காரணமாக அன்றைய தினம் மெய்நிகர் ஊடாக அவரை வழக்கு விசாரணைகளில் முன்னிலைப்படுத்தியதாகவும் பதில் பொலிஸ்மா அதிபர் குறிப்பிட்டுள்ளார்.

கம்பஹா நீதிமன்றத்தில் சஞ்சீவ மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்படவிருந்தமைக்கான காரணம் அந்த நீதிமன்றத்தின் மீதுள்ள கோபத்தால் அல்ல, சஞ்சீவ மீதிருந்த கோபத்தினாலாகும்.

கம்பஹா நீதிமன்றத்தில் மேற்கொள்ளப்படவிருந்த தாக்குதலுக்கான சந்தர்ப்பத்தைப் பொலிஸார் தடுத்துள்ளனர் என்பதால், அதனைக் கொழும்பு நீதிமன்றத்தில் மேற்கொள்வதற்கான வாய்ப்புக்கள் இருக்கலாம் என்பதை ஊகிப்பதற்குப் பெரும் புலமை தேவையில்லை. ஆனால், தகவல் கிடைத்திருந்தும் எந்தவொரு நடவடிக்கையும் எடுக்காத பதில் பொலிஸ்மா அதிபர், கனேமுல்ல சஞ்சீவ கொல்லப்படுகின்றமைக்கு இடமளித்துவிட்டு வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்திருக்கின்றார்.

கொழும்பிலும் சஞ்சீவ மீது தாக்குதல்கள் மேற்கொள்ளப்படலாம் எனப் பதில் பொலிஸ்மா அதிபர் சிந்திக்காமல் இருப்பதற்கான வாய்ப்புக்கள் இல்லை. சஞ்சீவ மீது இலக்கு வைத்தவர்கள் கைது செய்யப்படும் வரை அவருக்கான அச்சுறுத்தல் நீங்கவில்லை என்பதையும் பதில் பொலிஸ்மா அறிந்திருப்பார். அந்த வகையில் இந்தக் கொலையில் பதில் பொலிஸ்மா அதிபருக்கும் தொடர்பிருக்கலாம் என்ற நியாயமான சந்தேகம் எமக்கு ஏற்படுகின்றது.

அவ்வாறெனில் பதில் பொலிஸ்மா அதிபர் மீது யார் நடவடிக்கை எடுப்பது? பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ரவி செனவிரத்னவுக்கே அந்த அதிகாரம் காணப்படுகின்றது. உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல்கள் தொடர்பில் 12 நாட்களுக்கு முன்னரே தகவல் கிடைத்திருந்தும் நடவடிக்கை எடுக்கத் தவறிய ரவி செனவிரத்னவுக்கே இந்தப் பொறுப்பு காணப்படுகின்றது. இவர் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் பதவியில் இருக்கும் வரை புலனாய்வுத் தகவல்கள் கிடைத்தாலும் எவ்வித நடவடிக்கைகளும் எடுக்காமல் இருக்கும் நோய் ஒருபோதும் குணமடையப் போவதில்லை." - என்றார்.



# ஜனாதிபதி ஊடகப் பிரிவின் பணிப்பாளர் நாயகம் நியமனம்

ஜனாதிபதி ஊடகப் பிரிவின் புதிய பணிப்பாளர் நாயகமாக பிரசன்ன பெரேரா நியமிக்கப்பட்டுள்ளார்.

அதற்கான நியமனக் கடிதத்தினை ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்க நேற்று ஜனாதிபதி அலுவலகத்தில் வைத்து அவருக்கு வழங்கினார்.

பிரசன்ன பெரேரா பேராதனை பல்கலைக்கழகத்தில் கலைமாணி பட்டத்தையும், ஸ்ரீஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தில் தொடர்பாடல் பட்டப்பின் டிப்ளோமாவையும் பெற்றுக்கொண்டுள்ளதோடு, களனி பல்கலைக்கழகத்தில் வெகுசன தொடர்பாடல் பட்டப்பின் படிப்புக்கான பட்டத்தையும் பெற்றுள்ளார்.

# கொட்டாஞ்சேனை துப்பாக்கிச் சூடு; கைதான சந்தேக நபர் தடுப்புக்காவலில்




கொட்டாஞ்சேனை பகுதியில் உள்ள வர்த்தக நிலையமொன்றில் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட சந்தேக நபர் தடுத்து வைக்கப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார் என பொலிஸார் நீதிமன்றத்திற்கு அறிவித்துள்ளனர்.

சம்பவம் தொடர்பாக முகத்துவாரம் – மெத்சந்த செவன பகுதியில் வைத்துக் கொழும்பு வடக்கு பிராந்திய குற்ற விசாரணை பணியகத்தினால் 28 வயதுடைய சந்தேக நபர் நேற்று கைது செய்யப்பட்டார்.

மேற்படி சந்தேக நபர் கொழும்பு மேலதிக நீதவான் பவித்ரா சஞ்சீவனி பத்திராஜ முன்னிலையில் நேற்று பிரசன்னப்படுத்தப்பட்ட போது பொலிஸார் இந்த விடயத்தை நீதிமன்றத்திற்கு அறிவித்துள்ளனர்.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## லாயக்கற்ற தலைவர்

அண்மைய நாள்களில் பொலிஸார் மற்றும் சிறைச்சாலை அதிகாரிகளின் காவலில் இருந்த சந்தேகநபர்கள் கொல்லப்பட்ட சம்பவங்களால் சட்டத்தின் ஆட்சிக்குப் பெரும் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாக இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

அறிக்கையொன்றை வெளியிட்டு இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் பகிரங்கமாக இதனைக் குறிப்பிட்டுள்ளது.

அண்மையில் ஹல்ஸ்டோர்ப் நீதிவான் நீதிமன்றத்திற்குள் சிறைச்சாலை அதிகாரிகளின் காவலில் இருந்தபோது சந்தேக நபர் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

கடந்த 21 ஆம் திகதி இரண்டு சந்தேக நபர்கள் பொலிஸாரின் காவலில் இருந்தபோது பொலிஸாரின் துப்பாக்கிச் சூட்டில் உயிரிழந்துள்ளனர்.

இவ்வாறான சம்பவங்களினால் சட்ட அமைப்புகள் மீதான பொதுமக்களின் நம்பிக்கை சிதைவடையும் என்பதால் அவற்றைத் தடுப்பதற்குப் பொலிஸார் மற்றும் சிறைச்சாலை அதிகாரிகள் மிகுந்த பொறுப்புடன் செயற்பட வேண்டும் எனவும் சட்டத்தரணிகள் சங்கம் வலியுறுத்தியுள்ளது.

பொலிஸார் மற்றும் பாதுகாப்புப் படையினரின் காவலில் தடுத்து வைக்கப்படுவோர் படுகொலை செய்யப்படுகின்ற சட்டவிரோத - கொடூர - சம்பவங்கள் தொடர்பில் உயர்நீதிமன்றமே தலையிட்டு பல வழிகாட்டுதல்களை - கட்டளைகளை - அவ்வப்போது பாதுகாப்புத் துறையினருக்கும் பொலிஸாருக்கும் வழங்கியிருக்கின்றது.

அவற்றை மீறி, பொலிஸ் பாதுகாப்பில் இத்தகைய படுகொலைகள் தொடர்கின்றன.

முன்னைய அரசுகளின் ஆட்சிக் காலங்களில் இத்தகைய படுகொலைகள் பொலிஸ் பாதுகாப்பில் இடம்பெற்றபோது அவற்றைஎதிர்க் கட்சிகள் தரப்பில் அமர்ந்திருந்து கொண்டு காட்டமாகக் கண்டித்து, மோசமாக விமர்சித்தவர் அநுர குமார திஸநாயக்கா.

இன்று அவர் ஜனாதிபதி. முப்படைகளினதும் பொலிஸினதும் தளபதி அல்லது தள கர்த்தர் அவர் தான்.

முன்னைய காலங்களில் இத்தகைய படுகொலைகள் இடம்பெறுகின்ற போது, அவற்றை நியாயப்படுத்தும் விதத்தில் பொலிஸாரால் முன்வைக்கப்படும் விளக்கங்களை அப்போதெல்லாம் அவர் மோசமாகக் கிண்டல் அடித்து விமர்சிப்பார்.

அந்த விமர்சனங்களில் அவர் குறிப்பிட்டபடியே இப்போது கடந்த 21 ஆம் திகதி இரண்டு சந்தேக நபர்கள் பொலிஸ் காவலில் இருந்தபோது சுட்டுக் கொல்லப்பட்டிருக்கிறார்கள்.

அந்தப் படுகொலைகள் தொடர்பாக அவற்றை நியாயப்படுத்த பொலிஸார் எத்தகைய விளக்கங்களை வழமையாகக் கூறுவார்கள் என்று முன்னர் எதிரணியில் இருந்தபடி அநுரகுமார திஸநாயக்கா கிண்டலாகக் குறிப்பிட்டாரோ, அந்த வாசகங்களையே இப்போது இந்தக் கொலைகள் தொடர்பான நியாயப்படுத்தலுக்கும் பொலிஸார் கூறுகின்றனர்.

அப்படியாயின் இந்தப் படுகொலைகள் தொடர்பாக நாட்டின் ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்கா இப்போது என்ன கூறப் போகிறார்?

இவ்விடயத்தில் அவர் காட்டும் மௌனம் சட்டம், ஒழுங்கு, நீதி, நியாயத்தை நிலை நாட்டுவதில் அவரும் லாயக்கற்றவர் என்பதையே உறுதிப்படுத்தி நிற்கும் என்பதை அவருக்கு நினைவூட்டிச் சுட்டிக் காட்ட விரும்புகிறோம்.




# உள்ளூர் உற்பத்தியாளர்கள் ஊக்குவிப்பு நிலையம் முல்லைத்தீவில் நேற்றுத் திறந்து வைக்கப்பட்டது

(ந.லோகதயாளன்)

கனேடிய தமிழர் பேரவையின் உதவியுடன் 'Made In Mullaitivu' எனும் உள்ளூர் உற்பத்தியாளர் ஊக்கு விப்பு நிலையம், நேற்றைய தினம் முற்பகல் 10.00 மணிக்கு முல்லைத்தீவில் மாவட்டச் செயலாளர் அ.உமாமகேஸ்வரன் மற்றும் சிறப்பு விருந்தினர் வவுனியா பல்கலைக்கழகத்தின் சந்தைப்படுத்தல் பீடத்தின் பீடாதிபதி யோ.நந்தகோபன் ஆகியோரால் திறந்து வைக்கப்பட்டது.

முல்லைத்தீவு மாவட்டத்தின் மாவட்டச் செயலாளர் மற்றும் உள்ளூர் உற்பத்தியாளர்களின் வேண்டுகோளுக்கமைய, கனேடியத் தமிழர் பேரவையின் நிதியுதவியுடன் இந்த செயற்றிட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்த செயற்றிட்டத்தினூடாக உள்ளூர் உற்பத்திகளை ஊக்குவிப்பதோடு, உற்பத்தியாளர்களுக்கு சர்வதேச சந்தை வாய்ப்பையும் பெற்றுக்கொடுக்க முடியும். இது வெற்றிபெறும் பட்சத்தில் நிலையான பொருளாதார கட்டமைப்பொன்றை வடக்கு, கிழக்கில் உருவாக்க முடியும் எனவும் நம்பப்படுகின்றது.

இவ் விழாவில் முல்லைத்தீவு மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் எஸ்.குணபாலன், இலங்கைக்கான கனேடியத் தூதரக அதிகாரிகள், கனேடிய தமிழர் பேரவையின் பிரதிநிதிகள் மற்றும் இத்திட்டத்துக்கான நன்கொடையாளர்கள், பொதுமக்கள் முதலானோர் கலந்துகொண்டனர்.










**கேள்வி : என்ன? இரண்டு வாரமாய் ஆளைக் காணோம். 'சுடுசரம்' ஓய்ந்து போய்விட்டதா? அல்லது எவருக்காவது அஞ்சி, எழுதுவதை விட்டுவிட்டீர்களா?**

பதில் : அச்சமா? எனக்கா? அஞ்சுவது மில்லை! அஞ்ச வருவதுமில்லை! கடந்த இரண்டு வாரங்களாக சொற்பொழிவுக்காகவும், கம்பன் விழாக்களில் கலந்துகொள்வதற்காகவும், ஊரூராய் ஓடித் திரியவேண்டி வந்துவிட்டது. மார்ச் மாத நடுப்பகுதி வரை, இந்நிலை தொடரப் போகிறது. இடையிற் கிடைத்த இடைவெளியில் தான் இவ்வார 'சுடுசரம்' எழுதப்படுகிறது.

அஞ்சாதீர்கள்! இறையருளால் தொடர்ந்தும் 'சுடுசரம்' பாய்ந்து கொண்டே இருக்கும்.

**************

**கேள்வி : கம்பன் விழாக்களில் இப்போது கூட்டம் குறைந்து விட்டது என்றும், பழையவர்களே விழாக்களில் பேசிக் கொண்டிருக்கிறார்கள், இன்றைய மேடைகளில் பலரையும் "கிழித்துத் தொங்கவிடும்", புதிய இளைஞர்களுக்கு இடங்கொடுக்காதது ஏன்? என்றும், 'கம்பவாரிதி' சிபாரிசு செய்த இரண்டு பேரும், தேர்தலில் தோற்றுவிட்டார்கள். வாரிதியாரின் கருத்தென்றால் அதைக் கம்பன் கழகத்தின் கருத்தாகவே கொள்ள வேண்டும். அப்படியானால் கம்பன் கழகத்தின்கருத்தைமக்கள்நிராகரித்துவிட்டார்கள் என்றுதானே அர்த்தம் என்றும் கூறுபவர்களுக்கும், கம்பன் விழாவிலேயே துணிவோடு வந்து பேசிய நாடாளுமன்ற உறுப்பினர் ஸ்ரீதரனின் கருத்துகளுக்கும் என்ன பதில் சொல்ல விரும்புகிறீர்கள்?**

பதில் : பாவம்! கட்சிக்குள் ஏற்பட்டிருக்கும் நெருக்கடியால், ஸ்ரீதரன் நிறையக் குழம்பிப் போய் இருக்கிறார் என்று நினைக்கிறேன். விழாவில் தொடக்கவுரை ஆற்ற வருவதாய் எமக்குச் சொல்லிவிட்டு, பின்னர் நாம் அழைப்பிதழ் அடித்த பிறகு, நிறைவு நாளில், கவர்னர் உடனும், இந்தியத்துணைத் தூதருடனும் தன்னை நிகழ்ச்சியிற் போடாமல், சுமந்திரனைப் போட்டுவிட்டதாய்க் கூறி, விழாவில் தான் கலந்துகொள்ள மாட்டேன் என்று அறிவித்தார். அதன் பின்னர் கழகத்தை இழிவுசெய்ய இந்த வாய்ப்பைப் பயன்படுத்தலாம் என்று எண்ணியோ? என்னவோ? திடீரென்று விழாவன்று வந்து இறங்கினார்.

வந்தவர் தொடக்கவுரையை ஆற்றிவிட்டு, நாங்கள் ஏதேனும் பதில் கூறிவிடுவோம் என்ற பயத்தில், நிகழ்ச்சி தொடங்குவதற்கு முன்னரே மறிக்க, மறிக்க ஓடிவிட்டபடியால், கம்பன் விழாவிற்கு வந்து குவிந்த கூட்டத்தை அவர் பார்க்க முடியாமற் போயிற்று. அதனால் அவரது முதற் கருத்துக்கு நான் பதில் சொல்ல விரும்பவில்லை.

மற்றவர்களைக் கிழித்துத் தொங்கவிடுபவர்கள் எல்லாம் ஏறுவதற்கு, கம்பன்விழா மேடை ஒன்றும் அரசியல் மேடையல்ல. அந்த மேடையில் அனுபவமும், அறிவும் இல்லாதவர்கள் ஏற்றப்படமாட்டார்கள். தகுதியுள்ளவர்கள் இருந்தால், கழகம் அவர்களைத் தேடி அழைத்துவந்து மேடையேற்றும். கிழித்துத் தொங்கவிடுபவர்களையே சிறந்த பேச்சாளர்கள் எனச் ஸ்ரீதரன் நினைத்தால் அதற்கு நாங்கள் என்ன செய்யமுடியும்? அவர்களை, அவரே தன் அரசியல் மேடையில் ஏற்றவேண்டியது தான்.

அன்று அவர் இருக்கும்போதே, எமது கழக அறிவிப்பாளர், மேடையில் புதிய இளைஞர்களை மேடையேற்ற வேண்டும் என்று கூறும் ஸ்ரீதரன் அவர்கள், அரசியலில் இருந்து தான் ஒதுங்கிக் கொண்டு, புதிய இளைஞர்களுக்கு அரசியலிலும் இடங்கொடுக்கலாமே என்று பதில் கூறியதை, செவியில் வாங்காமலேயே ஸ்ரீதரன் அவர்கள் சென்றுவிட்டார்.

கழகத்தின் கருத்தை மக்கள் நிராகரித்து விட்டார்கள் என்று, ஸ்ரீதரன் கொண்டாடும் விடயம் பற்றியும் சில சொல்லவேண்டும். தேர்தல் காலத்தில் சுமந்திரனதும், சயந்தனதும் ஆதரவாளர்கள் சிலர் என் வீடுதேடி வந்து, அவர்களைப் பற்றிச் சில வார்த்தைகள் சொல்ல வேண்டும் எனக் கேட்டு, பதிவு செய்து சென்றார்கள். அவ்விருவரும் ஸ்ரீதரனைப் போலவே எங்களைப் பேணி நடப்பவர்கள். அதனால் அவர்களைப் பாராட்டிச் சில வார்த்தைகள் சொன்னேன். அக் கருத்துக்களை அவர்கள் தமது தேர்தல் பிரச்சாரத்திற்குப் பயன்படுத்தி இருப்பார்கள் போல.

அதனால்த்தான் ஸ்ரீதரன் ஆத்திரப்பட்டிருக்கிறார். அவரது ஆதரவாளர்கள் வந்து கேட்டிருந்தால், அவரைப் பற்றியும் நான் நிச்சயம் சொல்லியிருப்பேன். கேட்காதது அவர்கள் குற்றம். அதை விட்டுவிட்டு கேட்டவர்களுக்காய், நான் பேசியதைக் குற்றம் சாட்டுவது முறையற்ற ஒன்று.

இனி ஸ்ரீதரனின் கருத்துக்குப் பதில் சொல்லுகிறேன். நான் ஆதரித்தவர்கள் தோற்றதை வைத்துக் கழகத்தை மக்கள் நிராகரித்துவிட்டார்கள் என்று ஸ்ரீதரன் சொல்வது சிறுபிள்ளைத்தனமாய் இருக்கிறது. கடந்த ஜனாதிபதித் தேர்தலில் தனது கட்சியின், கட்டுப்பாட்டையும்மீறி பொது வேட்பாளருக்கு, ஸ்ரீதரன் ஆதரவளித்தார். பின்னர் அவ் வேட்பாளர் பெருந் தோல்வியடைந்ததை அனைவரும் அறிவர். அப்படியென்றால் ஸ்ரீதரனின் கூற்றுப்படி அவரையும் மக்கள் நிராகரித்துவிட்டார்கள் என்றல்லவா? ஆகும். முன்பின் சிந்தியாமற் பேசியிருக்கிறார் அவர்.

நிறைவாக ஸ்ரீதரனுக்கு ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். நான் நேசிக்கும் மனிதர்களில்

தொடர்ச்சி ▼

தொடர்ச்சி ▲

அவரும் ஒருவர். இவர்களில் யாரோடும் எனக்குத் தனிப்பகையும் இல்லை, தனி நட்பும் இல்லை. இன நன்மை நோக்கி இவர்களின் செயற்பாட் டிற்கேற்ப அவ்வப்போது கண்டித்தும், பாராட்டியும் எழுதி வருகிறேன். அவ்வளவே! புண்ணுள்ளவன் அருகில் வரும் எவரைக் கண்டாலும் பதறுவ தைப்போல, ஸ்ரீதரனும் தன் சூழ்நிலையால் நண்பர் யார்? பகைவர் யார் என்று தெரியாமல் எல்லோ ரைக் கண்டும் பதறத் தொடங்கியிருக்கிறார். இது அவருக்கு நல்லதல்ல.

இலக்கியக்காரர்கள் எல்லோருக்குமானவர்கள். அவர்களோடு வீணாகப் பகைப்பதை அவர் விட்டுவிடுவது நல்லது. நிறைவாக வள்ளுவரின் ஒரு குறளை நினைவூட்டி முடிக்கிறேன். 'வில்லேர் உழவர் பகை கொளினும் கொள்ளற்க சொல்லேர் உழவர் பகை'

**************

**கேள்வி : உங்களது கம்பன் விழாவின் நாடக அரங்கில் அர்ச்சுனாவைப் போல் ஒருவர் வேடமிட்டு நடித்ததை, பலரும் கண்டித்திருக் கிறார்களே! அது பற்றி என்ன சொல்ல விரும்புகிறீர்கள்?**

பதில்: அவர்கள், நடுநிலையாளர்களாய் இல்லை. எங்களின் வளர்ச்சிகண்டு பொறாமைப்படுப வர்களும், எங்கள் மேடைகளில் ஏற ஆசைப்பட்டு, இடம் கிடைக்காதவர்களுந்தான் பெரும்பாலும் கழகத்தையும், என்னையும் கண்டித்துப் பொது வெளிகளில் 'கொமன்ஸ்' போட்டுவருகிறார்கள். அதனால், அவர்கள் பற்றி நாங்கள் அதிகம் கவலைப்படுவதில்லை. எங்களை ஆதரிப்பவர்க ளின் தொகையோடு ஒப்பிடுகையில் இவர்களின் தொகை வெறும் புள்ளியளவானதுதான்.

எமது கழக விழாக்களில், ஜனரஞ்சகத்திற் காக இத்தகைய ஒரு நிகழ்வைத் தொடந்து நடத்தி வருகிறோம். அது அர்ச்சுனாவைப் பழிதீர்ப்ப தற்காக நடத்தப்பட்ட நிகழ்ச்சியல்ல. இம்முறை இரமாயணக்காலத் தலைவர்களும், தற்போதைய தலைவர்களும் சந்தித்தால் என்ற கற்பனையோடு நிகழ்வொன்று அமைக்கப்பட்டது. அதில் சுமந்திர னையும், அர்ச்சுனாவையும், ரணிலையும் குறிப் பால் உணர்த்திய பாத்திரங்கள், இரமாயணத் தலைவர்களைச் சந்தித்தன.

நடித்தவர்கள் தமக்கான பாத்திரங்களைத் தாமே தேர்தெடுத்துத்தான் நடித்தனர். இதில் கழகத் திட்டமிடல் ஏதும் இல்லை. அதுகிடக்க...

இந் நிகழ்வுக்காகக் கருத்துத் தெரிவிப்பவர்கள் எல்லாம், அர்ச்சுனா எங்களைக் கேவலமாக இழிவு செய்தபோது எங்கே ஒழிந்திருந்தார்களாம்? இவர்களுக்கு எங்களது நல்லவை தெரிவதில்லை. ஒன்றுமே இல்லாத தீயவை மட்டும் பிரகாசமாய்த் தெரிகின்றன.

முன்பு பொங்கலின் போது, நான் செருப்பு அணிந்திருந்ததைக் கண்டித்து நேரமெடுத்து நூற்றுக்கணக்கான 'கொமன்ஸ்' போட்ட இவர்கள், நான் இந்தியப் பிரதமரைச் சந்தித்துவிட்டு வந்த போது மூச்சுக்கூடக் காட்டவில்லை. இதுதான் இவர்கள்.

**************

**கேள்வி : கடைசியில் சுமந்திரன், ஸ்ரீதரனுக் குப் போக்குக்காட்டி ஒருவாறு தமிழரசுக் கட்சியின் செயலாளராய் ஆகிவிட்டாரே, பார்த்தீர்களா?**

பதில்: ஸ்ரீதரன், தான் தன் தொகுதியில் பெற்றுவைத்திருக்கும் மக்கள் ஆதரவை வைத்து, சுமந்திரனைக் கவிழ்க்கப் பார்க்கிறார். சுமந்திரன், தான் பெற்று வைத்திருக்கும் புத்திக் கூர்மையை வைத்து, ஸ்ரீதரனைக் கவிழ்க்கப் பார்க்கிறார். கடந்த தேர்தலில் ஸ்ரீதரனது திட்டம் சுமந்திர னைத் தோற்கடித்தது. கட்சித் தேர்தலில் சுமந்திர னது திட்டம் ஸ்ரீதரனைத் தோற்கடித்திருக்கிறது. ஸ்ரீதரனின் பலம் அவருக்கு வெளியே இருக்கிறது. சுமந்திரனின் பலம் அவருக்கு உள்ளே இருக்கி றது. அதுதான் வித்தியாசம். சந்தர்ப்பத்திற்கு ஏற்ப அவ்விருவரும் ஒருவரது காலை மற்றவர் வாரிக் கொண்டிருக்கின்றனர்.

ஆனால் இவர்களின் போட்டியால், தமிழரசுக் கட்சி நாளாந்தம் தோற்று வருவதை இவர்கள் இருவரும் ஏனோ உணர்கிறார்கள் இல்லை. என்றைக்கு இவர்களின் பகை இல்லாமற் போகி றதோ அன்று தான் இவர்கள் இருவரும் உண்மை வெற்றி அடைவார்கள். அதற்கு இவர்களுக்குப் பின்னால் நின்று 'வால்முறுக்கும் கூட்டம்' வழிவிட வேண்டும்.

**************

**கேள்வி : பதவியேற்பு வைபவத்திலேயே ஆண், பெண் என்னும் இரு பாலினத்தை மட்டுமே அங்கீகரிக்கப் போவதாகக் கூறியுள்ள 'ட்ரம்ப்', இந்த விடயத்திற்கு இவ்வளவு முக்கியத் துவம் கொடுத்திருக்க வேண்டுமா என்ன?**

பதில் : அப்படித்தான் நானும் முதலில் நினைத் தேன். அண்மையில்தான் ஒரு செய்தியை அறிந்து அதிர்ந்தேன். அமெரிக்காவிலிருந்து திரும்பிய எனது மாணவர் ஒருவர் சொன்ன செய்தியைக் கேட்ட பிறகுதான், அந்த விடயத்திற்கு 'ட்ரம்ப்' கொடுத்த முக்கியத்துவத்தின் காரணம் புரிந்தது.

அங்கு ஆண், பெண், அலி என்ற மூன்று பாலின நிலை போய், இப்போது நாற்பதுக்கு மேற்பட்ட பாலினக்கூறுகளை இனங்கண்டு அவற்றுக் கான சுதந்திரத்தையும் வழங்க முற்படுகிறார் களாம். முதலில் என் மாணவன் இதைச் சொன்ன போது, உங்களைப் போலத் தான் எனக்கும் ஒன்றும் புரியவில்லை.

பிறகு அவன் அதனை, எனக்கு புரியவைக்க அங்கு நடந்த சம்பவம் ஒன்றை எடுத்துச் சொன்னான். நான் அதிர்ந்து போனேன்.

அங்கே ஓர் இளைஞன், தன்னை ஆணா கவோ, பெண்ணாகவோ, மூன்றாம் பாலினமாகவோ கருதாமல், தான் ஒரு பூனையின் பாலினத்தைச் சேர்ந்தவன் என்று நினைக்கத் தொடங்கினானாம். அதனை அவன் வீட்டில் வெளிப்படுத்த அவர்களும் அதனை ஏற்றுக்கொண்டார்களாம்.

ஒருநாள் அவனுக்கு ஏதோ சுகவீனம் ஏற்பட, அந்த சுகவீனத்திற்கு வைத்தியம் செய்வதற்காக அவன் ஒரு மிருக வைத்தியரிடம் சென்று, "நான் பூனை இனத்தைச் சேரந்தவன். என்னுடைய நோய்க்கு மருந்து தாருங்கள்" என அவரிடம் கேட்டானாம். அந்த வைத்தியர் அவன் ஏதோ வேடிக்கை செய்வதாக நினைத்துக் கண்டித்துத் துரத்தி விட்டாராம்.

அதனால் கோபங் கொண்ட அந்த இளைஞ னின் தாய், "ஒருவரின் பாலுணர்வு பற்றிய எண் ணத்தை ஏற்க மறுத்தது பிழை" என்று கூறி, அந்த வைத்தியரைக் கண்டித்ததோடு, "உன்னை நீதி மன்றத்திற்கு இழுக்கவும் எம்மால் முடியும்" என்று எச்சரித்துச் சென்றாளாம். இந்தக் கதையைக் கூறி, தற்போது நாற்பதுக்கு மேற்பட்ட பாலினக் கூறாளர்கள் தம்மை வெவ்வேறு பாலினமாய் இனங்கண்டு, இயங்கி வருகின்றார்கள் என்றும். அவ் எண்ணிக்கை இன்னும் அதிகரிக்கலாம் என்றும் கருதுகிறார்கள் என்றான்.

அப்போதுதான் 'ட்ரம்ப்' அந்த விடயத்திற்கு ஏன் இந்தளவு முக்கியத்துவம் கொடுத்தார் எனப் புரிந்து கொள்ள முடிந்தது.

ஆனால் ஒன்று, இயற்கையை மீறிய உணர்வு களை, கட்டுப்படுத்துகிறேன் எனத் தொடங்கிய அவர், இயற்கையில் அமைந்திருக்கும் மூன்றாம் பாலினத்தாரையும் ஏற்க மறுத்து நீக்கியது தவ றென்றே படுகிறது.

**************



# வவுனியாவில் 3,000 ஆவது நாளாகவும் தொடரும் சுழற்சி முறைப் போராட்டம்!

## அமெ., ஐரோப்பிய ஒன்றியக் கொடிகளுடன் தாய்மார் ஆர்ப்பாட்டம்

(கி.வசந்தன்)

வவுனியாவில் தமிழர் தாயக காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கத்தினால் முன்னெடுக்கப்பட்டு வரும் சுழற்சிமுறை போராட்டமானது 3,000 ஆவது நாளை அடைந்துள்ள நிலையில், நேற்று ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளினால் வவுனியா தபால் திணைக்களத்திற்கு அருகில் 3,000 நாளாகப் போராட்டம் மேற்கொள்ளும் கொட்டகைக்கு முன்பாக இந்தப் ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது காணாமல் ஆக்கப்பட்ட தங்களது உறவுகளின் உருவப் படத்தைத் தாங்கியவாறும், அமெரிக்க மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்தின் கொடிகளைத் தாங்கியவாறும் தாய்மார் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.












# தமிழ்த் தேசியத்தை இறுகப் பற்றி வாழ்ந்தவர் ஊடகவியலாளர் பாரதி

## இரங்கலுரையில் நீதியரசர் விக்னேஸ்வரன் தெரிவிப்பு



“தமிழ்த் தேசியத்தை இறுகப் பற்றி வாழ்ந்தவர் பாரதி அவர்கள். அவரின் அகால இழப்பு ஈடு செய்ய முடியாத தொன்று. ஊடகத் துறைக்கு அப்பால் தமிழ்த் தேசியத்தின் விருத்திக்காக மகத்தான பங்களிப்பு செய்து வாழ்ந்து வந்தவர் பாரதி!“"

– இவ்வாறு கூறினார் யாழ் மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும், வடமாகாண முன்னாள் முதலமைச்சருமான நீதியரசர் க.வி விக்னேஸ்வரன்.

மறைந்த பாரதி இராஜநாயகத்தின் இரங்கல் கூட்டம் நேற்று மாலை வெள்ளவத்தை, தமிழ்ச் சங்க மண்டபத்தில் நடைபெற்ற போது அங்கு இரங்கலுரை நிகழ்த்துகையில் நீதியரசர் க.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:–

நண்பர் பாரதி அவர்களின் இரங்கல் கூட்டத்தில் கலந்து கொள்வதில் மனத்திருப்தி அடைகின்றேன். பொதுவாகக் கொழும்பில் சந்தித்த அவரை அண்மைக் காலங்களில் அவர் யாழ்ப்பாணத்தில் வசித்து வந்த போது அவரைச் சந்தித்து அளவளாவ முடியவில்லையே என்று குறைப்பட்டுக் கொண்டிருந்தேன். கொழும்பில் இன்று அவரை நினைவுகூர் ஒரு சந்தர்ப்பம் கிடைத்ததே என்று திருப்தியுறுகின்றேன். என்ன! அவர் இன்று எம்மிடையே இல்லை! அவரின் நினைவு எம் உள்ளங்களில் நிலைத்து நிற்கின்றது.

பல முன்னணி பத்திரிகைகளின் ஆசிரியராகவும் ஊடகவியலாளராகவும் பெரிதும் மதிக்கப்படும் வகையில் எம்மத்தியில் வாழ்ந்த பாரதி ராஜநாயகம் திடீரென்று மறைந்த செய்தி என்னை மிகுந்த வேதனையில் ஆழ்த்தியது. நேற்றிருந்தார் இன்று இல்லை என்ற உண்மை கருத்தை நெருடியது. மூன்று நண்பர்கள் ஒருவர் பின் ஒருவராக இறைவனடி சேர்ந்துள்ளார்கள். மற்றைய இருவரும் திரு.எஸ்.பி.சாமி அவர்களும் சத்திரசிகிச்சை நிபுணர் வைத்திய கலாநிதி. யோகேஸ்வரன் அவர்களும் ஆவர்.

நான் அரசியலுக்கு வருவதற்கு முன்னர் உச்ச நீதிமன்ற நீதியரசராக இருந்த காலம் முதல் பாரதியை நான் அறிவேன். அவருடன் பழகிய 5 நிமிடங்களிலேயே அவர் கண்ணியம்மிக்க ஒரு நிறைகுடம் என்பதை நான் புரிந்து கொண்டேன். நான் மட்டுமல்ல எவரும் இலகுவில் புரிந்துகொண்டுவிட முடியும். அதிகம் பேசமாட்டார். ஆனால் நாம் பேசுவதை முழுமையாக உட்கிரகித்ததை ஓரிரு வார்த்தைகளால் எமக்கு உணர்த்தி விடுவார்.

ஊடகத் துறைக்கு அவர் ஆற்றிய மகத்தான சேவைகள் மற்றும் பங்களிப்புக்களைப் பற்றி நான் கூறி நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டிய அவசியம் ஏதும் இல்லை. ஆனால், அதற்கும் அப்பால் தமிழ் மக்களின் அரசியல் சமூக, பொருளாதார உரிமைகளுக்காக அவர் ஆற்றிய சேவைகள் மற்றும் அர்ப்பணிப்புக்கள் ஏராளம் என்பதை நாங்கள் நினைவுறுத்திக் கொள்ள வேண்டும். தமிழ் தேசம் பற்றிய தெளிவான உணர்வும் அதனை கட்டியெழுப்புவதற்கான சிந்தனையும் அவர் மனதில் ஆழமாக பதிந்திருந்தமையை நான் அறிந்திருந்தேன்.

தமிழ் தேசத்துக்கான அவரின் பங்களிப்புகள் பற்றி நான் அவரின் நண்பர்களிடம் இருந்து தான் முதலில் அறிந்துகொண்டேன். பாரதி ஒரு போதும் தற்பெருமை பேசியவர் அல்லர். எத்தனையோ இடர்களின் மத்தியில் அவர் வாழ்ந்துவந்த போதிலும் ஒரு போதும் தனிப்பட்ட எந்த உதவியையும் அவர் என்னிடம் கேட்டதில்லை. அவர் தான் எனக்கு உதவியிருக்கின்றார். ஒரு நல்ல மனிதரை இழந்துவிட்டோம். ஆழமாகச் சிந்திக்கக் கூடிய ஒரு பெரு மனிதரைப் பறிகொடுத்து நிற்கின்றோம்.

நான் அரசியலுக்குள் நுழைந்த கடந்த 12 வருட காலத்தில் ஏராளமான தடவைகள் அவரைச் சந்தித்து பல்வேறு விடயங்கள் குறித்தும் அவருடன் கலந்துரையாடியமை எனது நினைவுக்கு வருகின்றன. தமிழ் மக்களின் பிரச்சினைகள் மற்றும் அரசியல் பற்றி மிகவும் தெளிவான நிலைப்பாடுகளை அவர் கொண்டிருந்தார். அவரின் ஆலோசனைகள் எனக்குப் பெரும் உதவியாக இருந்திருக்கின்றன. என் பிரச்சினைகள் பற்றிப் பேச நானே அவரை நாடிச் செல்ல வேண்டும். ஆனால் எனக்கு ஏதாவது பிரச்சினை என்று அறிந்தவுடனேயே என்னைத் தேடி என் இல்லம் நாடி வந்துவிடுவார். இவ்வாறான ஒரு நண்பரை இனி நான் என்று காண்பேனோ?

பாரதி மட்டுமன்றி அவரின் குடும்பமே தமிழ் மக்களின் மேம்பாட்டுக்காக மகத்தான பங்களிப்பை ஆற்றியுள்ளதாக அறிகின்றேன்.

தமிழ் ஊடகத்துறைக்கும், அரசியலுக்கும், சமூகத்துக்கும் வழிகாட்ட வேண்டியவை இன்னமும் ஏராளம் இருக்கின்றபோது இத்தனை விரைவாக இறைவன் பாரதியைத் தன்பக்கம் வரவழைத்துக்கொண்டமை எமது துரதிர்ஷ்டமே.

அண்மைக் காலங்களில் தமிழினமானது ஆழமான தமிழ் அறிவையும், பற்றையும், தமிழினம் சார்ந்த கரிசனையையும் கொண்ட சிரேஷ்ட தமிழர்கள் பலரை இழந்து வருகின்றது. இதனால் தன்னலம் சார்ந்த சந்தர்ப்பவாதிகள் பலர் தமிழ் அரசியல், கலாசார, கல்வி, கலை அரங்கங்களில் முன்னிலை வகிக்கத் தொடங்கியுள்ளார்கள். அவ்வாறானவர்களை ஆட்டிப்படைக்கும் அசுர குணங்கள் அகந்தையும் அகங்காரமுமே. இது தமிழினத்தின் ஒரு சாபக்கேடு. தமிழ்த் தேசியம் பற்றி அவர்களுடன் பேசினால் “ஏன் நாங்கள் அரசாங்கத்திடம் இருந்து ஏதாவது பெறுவது உங்களுக்குப் பொறாமையாக இருக்கின்றதா?“ என்று கேட்கின்றார்கள். இதில் விசித்திரம் என்னவெனில் வெளிநாட்டு தமிழ் இளைஞர், யுவதிகள் தமிழ்த் தேசியத்தின்பால் நெருங்கிய நாட்டம் காட்ட முனையும் போது, எமது உள்ளூர் இளைஞர், யுவதிகள் எதை, யாரிடம் இருந்து, எவ்வாறு பெறலாம் அல்லது தட்டிப் பறிக்கலாம் என்று சிந்திக்கத் தொடங்கியிருப்பது தமிழினத்தின் வருங்காலத்தைப் பாதிக்கப் போகின்றது.

தன்னாட்சி, தற்சார்பு, தன்னிறைவு என்று நாங்கள் கட்சிக் குறிக்கோள்களை அமைக்க, தன்னலம், அரச சார்பு, தன் இச்சைப் பூர்த்தி என்ற குறிக்கோள்களை அவர்களுள் பிறர் உருவாக்கி வருகின்றனர்.

தமிழ்த் தேசியம் என்பது ஓர் ஏட்டுச் சுரைக்காய் அல்ல. எமது வருங்காலத்தை நிர்ணயிக்கும் திசையறிகருவி. திக்குத் தெரியாது திண்டாடிக் கொண்டிருக்கும் தமிழ் மக்கள் கரிசனையுடன் பின்பற்ற வேண்டிய அரசியல் நெறிமுறையாகும்.

தமிழ்த் தேசியத்தை இறுகப் பற்றி வாழ்ந்தவர் பாரதி அவர்கள். அவரின் அகால இழப்பு ஈடு செய்ய முடியாத தொன்று. ஊடகத் துறைக்கு அப்பால் தமிழ்த் தேசியத்தின் விருத்திக்காக மகத்தான பங்களிப்பு செய்து வாழ்ந்து வந்தவர் பாரதி! அவர் ஆத்மா சாந்தி அடைவதாக!

பாரதியின் மறைவினால் துயருறும் மனைவி, மகன், தங்கை, உறவினர்கள் மற்றும் நண்பர்களுக்கு எனது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக்கொள்கின்றேன். என்றார்.

# கொழும்பு தமிழ்ச் சங்கத்தில் நேற்று மாலை ஊடகவியலாளர் பாரதிக்கு இரங்கல் நிகழ்வு

(படங்கள்: சண்முகலிங்கம் சுரேந்திரன்)




















# கொழும்பு தமிழ்ச் சங்கத்தில் நேற்று மாலை ஊடகவியலாளர் பாரதிக்கு இரங்கல் நிகழ்வு
















# கொழும்பு தமிழ்ச் சங்கத்தில் நேற்று மாலை ஊடகவியலாளர் பாரதிக்கு இரங்கல் நிகழ்வு


















# மணல் ஏற்றிச்சென்ற பார ஊர்தி நானுஓயா பகுதியில் கவிழ்ந்தது

(பொகவந்தலாவ நிருபர் எஸ்.சதீஸ்)

மஹியாங்கனை பகுதியிலிருந்து தலவாக்கலை பகுதிக்கு மணல் ஏற்றிச்சென்ற லொறி ஒன்று கட்டுப்பாட்டை இழந்து வீதியில் குடைசாய்ந்து விபத்துக்குள்ளானது.

இந்த விபத்து நேற்று அதிகாலை 4.00 மணியளவில் நானுஓயா டெஸ்போட் பகுதியில் இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இவ் விபத்தினால் நுவரெலியா – தலவாக்கலை ஏ – 7 பிரதான வீதி வழியான போக்குவரத்து ஒரு மணித்தியாலம் பாதிக்கப்பட்டது.

எனினும் பிரதேசவாசிகளின் ஒத்துழைப்புடன் உடனடியாக வீதியில் கொட்டிய மணலை அகற்றி வீதியின் போக்குவரத்தைப் பொலிஸார் வழமைக்குக் கொண்டு வந்தனர்.

விபத்துச் சம்பவித்த போது லொறியில் சாரதி மட்டும் அதில் பயணித்துள்ளார் எனவும், அவர் தெய்வாதீனமாக சிறு காயங்களுடன் உயிர் தப்பியுள்ளார் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

லொறியில் திடீரென ஏற்பட்ட இயந்திரக் கோளாறு காரணமாக சாரதிக்கு வாகனத்தை கட்டுப்படுத்த முடியாமல் போய் அது வீதியில் குடைசாய்ந்துள்ளது எனவும் இதனால் லொறியில் இருந்த 3 கியூப் மணலில் 1 கியூப் மணல் வீதியில் கொட்டப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.






# குருநாகல் – கொழும்பு வீதியில் நால்ல பிரதேசத்தில் விபத்து!

(உடப்பு க.மகாதேவன்)

குருநாகல் – கொழும்பு வீதியில் நால்ல பிரதேசத்தில் நேற்று இடம்பெற்ற விபத்தில் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

இலங்கைப் போக்குவரத்துச் சபைக்கு சொந்தமான பஸ்ஸ/ம் ஓட்டோவும் ஒன்றுடன் ஒன்று மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்தின் போது ஓட்டோவின் சாரதி படுகாயமடைந்துள்ள நிலையில் சிகிச்சைக்காக வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். மேலதிக விசாரணைகள் தொடர்கின்றன.







# ஆரையம்பதியில் வாள்வெட்டுத் தாக்குதல் நடத்திய நான்கு பேருக்கு விளக்கமறியல்

## மற்றைய இருவரைக் கைது செய்யுமாறு நீதிவான் உத்தரவு

(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பு ஆரையம்பதி மகா வித்தியாலய விளையாட்டு மைதானத்தில் விளையாடிக் கொண்டிருந்தவர்கள் மீது 5 பேர் கொண்ட குழுவினர் வாளால் வெட்டி தாக்குதல் நடத்திய சம்பவம் தொடர்பாக கைது செய்யப்பட்ட 4 பேரையும் எதிர்வரும் 4 ஆம் திகதி வரை விளக்கமறியில் வைக்குமாறும் ஏனைய இரு சந்தேகநபர்களை கைது செய்து நீதிமன்றில் ஆஜர்படுத்துமாறும் மட்டக்களப்பு நீதுவான் நேற்றுத் திங்கட்கிழமை உத்தரவிட்டார்.

ஆரையம்பதி மகாவித்தியாலய விளையாட்டு மைதானத்தில் கடந்த வியாழக்கிழமை மாலை 6 மணிக்கு மின்னொளியில் இளைஞர்கள் விளையாடிக் கொண்டிருந்தனர். இதன்போது அங்கு வாள்களுடன் நுழைந்த 5 பேர் கொண்ட வாள் வெட்டுக்குழு விளையாடிக் கொண்டிருந்த சிலர் மீது துரத்தி துரத்தி வாளால் வெட்டி தாக்குதல் நடத்தியதில் இருவர் படுகாயமடைந்த நிலையில் மட்டு போதனா வைத்தியசாலை அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டனர்.

இந்த தாக்குதலை மேற்கொண்ட குழுவினர் தப்பி ஓடி தலைமறைவாகியுள்ள நிலையில் ஞாயிற்றுக்கிழமை இரவு 4 பேரை பொலிஸார் கைது செய்தனர். அவர்களை மட்டக்களப்பு நீதுவான் நீதிமன்றில் நேற்றுத் திங்கட்கிழமை ஆஜர்படுத்தியபோது அவர்களை எதிர்வரும் 4 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறும், ஏனைய இரு சந்தேகநபர்களையும் கைது செய்து நீதிமன்றில் ஆஜர்படுத்துமாறும் நீதிவான் உத்தரவிட்டாார்.

# விபத்தில் மோதிய காரும் மோ.சைக்கிளும் தீப்பற்றி எரிந்து நாசம்; இருவருக்குக் காயம்

## வவுனியா பூந்தோட்டம் வீதியில் நேற்றுச் சம்பவம்





(கி.வசந்தன்)

வவுனியா, பூந்தோட்டம் வீதியில் சென்று கொண்டிருந்த கார் மற்றும் மோட்டார் சைக்கிள் விபத்துக்குள்ளாகிய நிலையில் தீப்பற்றி முழுமையாக எரிந்த சம்பவம் ஒன்று நேற்று இடம் பெற்றுள்ளது.

வவுனியா நகர் பகுதியில் இருந்து பூந்தோட்டம் நோக்கிச் சென்ற காரும் பூந்தோட்டம் பகுதியில் இருந்து வவுனியா நகர் நோக்கி வந்த மோட்டார் சைக்கிளும் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளாகி இருக்கின்றன. இதனை அடுத்து இரு வாகனங்களும் தீப்பற்றி எரிந்தன. அங்கு குழுமிய மக்கள் தீயை க் கட்டுப்படுத்த முயற்சிகள் மேற்கொண்ட போதிலும் அது சாத்தியப்படவில்லை.

இந்நிலையில் மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் காயம் அடைந்த நிலையில் வவுனியா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர். காரில் வந்தவர்கள் காப்பாற்றப்பட்டனர்.

இந்நிலையில் வவுனியா நகர சபையின் தீயணைப்பு பிரிவினர் விரைந்து வந்து தீயை கட்டுப்படுத்த முயற்சித்த போதிலும் கார் மற்றும் மோட்டார் சைக்கிள் முழுமையாக எரிந்து விட்டன.

விபத்து தொடர்பான விசாரணைகளை வவுனியா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.




# உள்ளூராட்சி தேர்தல் குறித்து இவ்வாரம் கலந்துரையாடல்

உள்ளூராட்சி மன்ற தேர்தல்கள் மற்றும் எதிர்கால நடவடிக்கைகள் குறித்துக் கலந்துரையாடுவதற்காகத் தேர்தல்கள் ஆணைக்குழு எதிர்வரும் 27 ஆம் திகதி கூடவுள்ளது.

இதன்போது, உள்ளூராட்சி மன்ற தேர்தலுக்கான திகதிகள் மற்றும் நேரங்கள் குறித்துக் கலந்துரையாடப்படும் என எதிர்பார்க்கப்படுவதாகத் தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் ஆர்.எம்.ஏ.எல். ரத்நாயக்க தெரிவித்தார்.

இதேவேளை, வேட்புமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டதன் பின்னரே உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தொடர்பான வாக்கெடுப்பு திகதி அறிவிக்கப்படும் எனத் தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீ ரத்நாயக்க, அம்பாறையில் அண்மையில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் தெரிவித்தார்.

இந்த நிலையில், எதிர்வரும் ஏப்ரல் மாதத்தில் உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் நிச்சயமாக நடைபெறும் என மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி சபைகள் பிரதி அமைச்சர் ருவன் செனரத் தெரிவித்துள்ளார்.

அம்பாந்தோட்டையில் ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இதற்கிடையில், உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்துவதற்குத் தேவையான நிதியை அரசாங்கம் ஏற்கனவே ஒதுக்கியுள்ளதாக ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க நேற்று ,முன்தினம் கண்டியில் தெரிவித்திருந்தார்.

அத்துடன், உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்துவதில் தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு எந்த சட்டத் தடையும் இல்லை எனவும் ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார்.

# கெஹெலியவின் சொத்துகள் தொடர்பான ஆவணப் பிரதிகளை வழங்குமாறு உத்தரவு





லஞ்சம் மற்றும் ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவினால் கைப்பற்றப்பட்டுள்ள முன்னாள் அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்ல மற்றும் அவரது குடும்ப உறுப்பினர்களின் சொத்துகள் தொடர்பான அசல் ஆவணங்களின் சான்றளிக்கப்பட்ட பிரதிகளை அவர்களுக்கு வழங்குமாறு கொழும்பு மேல் நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டுள்ளது.

மேற்படி ஆணைக்குழுவால் நடத்தப்பட்ட விசாரணை தொடர்பாக, அவர்களின் வங்கிக் கணக்குகள், ஆயுள் காப்பீடு போன்றவற்றை முடக்குவதற்குக் கொழும்பு மேல் நீதிமன்றம் முன்னதாக உத்தரவுகளைப் பிறப்பித்திருந்தது.

எனினும், இது தொடர்பாக கெஹெலிய ரம்புக்வெல்ல மற்றும் அவரது குடும்ப உறுப்பினர்கள் சார்பாக நேற்று நீதிமன்றில் முன்னிலையான சட்டத்தரணிகள், நீதிமன்ற உத்தரவுகளால் முடக்கப்பட்டுள்ள தங்கள் தரப்பினர்களுக்கு அவர்களது சொத்துகள் தொடர்பான அசல் ஆவணங்களின் சான்றளிக்கப்பட்ட பிரதிகளை வழங்குமாறு கோரிக்கை விடுத்தனர்.

இந்த கோரிக்கையை ஏற்றுக்கொண்ட கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி ஆதித்ய படபெந்திகே, அசல் ஆவணங்களின் சான்றளிக்கப்பட்ட பிரதிகளை விண்ணப்பதாரர்களுக்கு வழங்குமாறு உத்தரவிட்டார்.



# எச்சரிக்கை மட்டத்துக்கு உயரும் வெப்பநிலை

நாட்டின் பல பகுதிகளில் நேற்று நிலவிய கடுமையான வெப்பநிலை இன்றும் தொடரும் என்று வளிமண்டலவியல் திணைக்களம் அறிவித்துள்ளது.

இன்றைய தினமும் நாட்டின் பல இடங்களில் மனித உடலால் உணரக் கூடிய வெப்பநிலையானது எச்சரிக்கை மட்டத்துக்கு உயரும் என்று அதன் அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி வடமேல், மேல், சப்ரகமுவ ஆகிய மாகாணங்களிலும், காலி, மாத்தறை ஆகிய மாவட்டங்களிலும் கடுமையான வெப்பநிலை நிலவும் என்றும் வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.




# இராமேஸ்வரத்துக்கு வந்த இலங்கைத் தமிழ் அகதிகள்

ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 2 சிறுவர்கள் உட்பட 4 பேர் இலங்கை தலைமன்னாரில் இருந்து அகதிகளாக புறப்பட்டு நேற்று அதிகாலை 2 மணிக்கு இராமேஸ்வரம் அரிச்சல்முனை கடலோரப் பகுதிக்கு வந்தடைந்தனர்.

தீடையில் தத்தளித்தவர்களை கடலோரக் காவல்படையினர் மீட்டு கடலோர காவல் குழும பொலிஸாரிடம் ஒப்படைத்தனர். அவர்கள் இது தொடர்பாக விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

# முப்படையிலிருந்து தப்பிச்சென்ற அனைவரையும் கைது செய்ய உத்தரவு



முப்படையில் இருந்து தப்பிச்சென்றுள்ள அனைத்து உறுப்பினர்களையும் கைது செய்ய உத்தரவிடப்பட்டுள்ளது.

பாதுகாப்பு செயலாளர் எயார் வைஸ் மார்ஷல் சம்பத் துய்யகொந்தாவினால் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

அதனடிப்படையில், முன்னறிவிப்பின்றி முப்படையில் இருந்து தப்பிச்சென்றுள்ள அனைவரையும் கைது செய்யுமாறு முப்படைகளின் பிரதானிகளுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.



# 490 கிலோ கஞ்சாவுடன் பரந்தனில் இருவர் கைது

கிளிநொச்சி – பரந்தன் பகுதியில் 490 கிலோ கிராம் கஞ்சாவுடன் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இராணுவ புலனாய்வு பிரிவினருக்கு கிடைத்த தகவலுக்கு அமைய மேற்படி சந்தேகநபர்கள் நேற்று கைது செய்யப்பட்டுள்ளனர்.சந்தேகநபர்கள் லொறியொன்றில் கஞ்சா தொகையை கொண்டு சென்ற போதே கைதாகியுள்ளனர்.

மேலதிக விசாரணைகளுக்காக சந்தேகநபர்கள் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

# மோ. சைக்கிளுடன் குரங்கு மோதியதில் இளம் குடும்பப் பெண் பரிதாப உயிரிழப்பு

**(பா.சதீசன்)**

புதுக்குடியிருப்பு ஒட்டுசுட்டான் வீதியில் இடம்பெற்ற வாகன விபத்தில் இளம் குடும்பப் பெண் உயிரிழந்த சம்பவம் ஒன்று நேற்றையதினம் இடம்பெற்றுள்ளது.

நேற்று மாலை இடம்பெற்ற விபத்து சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதாவது:–

புதுக்குடியிருப்புப் பகுதியில் மரணச் சடங்கு ஒன்றில் கலந்துவிட்டு வீடு திரும்புவதற்காக புதுக்குடியிருப்பு ஒட்டுசுட்டான் வீதியில் மோட்டார் சைக்கிளில் கணவர், மனைவி, 6 மாத குழந்தையுடன் பயணித்து கொண்டிருந்தனர். அந்தச் சமயம் குரங்கு ஒன்று குறுக்கே மோதியதில் தாய் தலையில் அடிபட்டதனால் புதுக்குடியிருப்பு வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இந்த விபத்தில் ஒட்டிசுட்டான் பகுதியை சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தாயான அகிலன் தனுஷியா என்ற 35 வயதான இளம் குடும்ப பெண்ணே உயிரிழந்தார்..

மேலதிக விசாரணைகளை புதுக்குடியிருப்பு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.







# ராஜஸ்தான் சட்டசபையில் வெடித்தது வன்முறை!

ஜெய்ப்பூரில் உள்ள ராஜஸ்தான் சட்டசபைக்கு வெளியே காங்கிரஸ் தொண்டர்கள் நேற்று திங்கள் கிழமை மாபெரும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

முன்னாள் பிரதமர் இந்திரா காந்திக்கு எதிராக ராஜஸ்தான் அமைச்சரின் சர்ச்சைக்குரிய கருத்துக்களால் சலசலப்பு ஏற்பட்டுள்ள நிலையில் இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

ஆர்ப்பாட்டக்காரர்கள் பேரணியாக சட்ட சபைக்குள் நுழைய முற்படும் போது, அவர்களை பொலிஸார் தடுத்து நிறுத்த முயற்சித்ததால் போராட்டம் வன்முறையாக மாறியது.

போராட்டத்தின் வீடியோக்கள், ஆர்ப்பாட்டக்காரர்கள் பொலிஸ் தடுப்புகளில் ஏற முயற்சிப்பதைக் காட்டியது, சிலர் உடல் ரீதியான மோதலில் ஈடுபட்டுள்ளனர்.

பி.ரி.ஐ. செய்தி நிறுவனத்தின் தகவலின் படி, சட்டமன்ற உறுப்பினர்களான ஹரிஷ் மீனா மற்றும் முராரி மீனா, முன்னாள் அமைச்சர் பி.டி.கல்லா மற்றும் பல மூத்த காங்கிரஸ் தலைவர்களும் ஆர்ப்பாட்டத்தில் கலந்து



கொண்டனர் என கூறப்படுகிறது.

கடந்த 21 ஆம் திகதி ராஜஸ்தான் சட்டசபையில் மத்திய அரசின் 'லக் பதி திதி' திட்டம் குறித்த விவாதத்தின் போது, மாநிலத்தின் சமூக நலத்துறை அமைச்சர் அவினாஷ் கெலாட், காங்கிரஸை விமர்சித்தார்.

2023 - 24 வரவு- செலவுத் திட்டத்தில், எப்போதும் போல, உங்கள் பாட்டி இந்திரா காந்தியின் பெயரை இந்த திட்டத்திற்கு பெயரிட்டீர்கள் என்றும் சாடினார்.

இந்த கருத்து சபையில் உடனடி சலசலப்பை ஏற்படுத்தியது.

இது மூன்று ஒத்திவைப்புகளுக்கு வழிவகுத்தது மற்றும் மாநில கட்சி தலைவர் கோவிந்த் சிங் தோடசரா உட்பட 6 காங்கிரஸ் சட்டமன்ற உறுப்பினர்கள் பட்ஜெட் கூட்டத் தொடரின் எஞ்சிய காலத்திற்கு இடைநீக்கம் செய்யவும் வழிவகுத்தது.

இதையடுத்து, அவினாஷ் கெலாட் மன்னிப்பு கேட்கக் கோரி காங்கிரஸ் சட்டமன்ற உறுப்பினர்கள் சட்டசபை வளாகத்தில் முற்றுகைப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

# தருமபுரி அருகே பட்டாசு குடோனில் வெடி விபத்து; 3 பெண்கள் உயிரிழப்பு




தருமபுரி அருகே பட்டாசு குடோனில் ஏற்பட்ட தீ விபத்தில் பட்டாசுகள் வெடித்ததில் அங்கு பணியாற்றிய 3 பெண்கள் உடல் சிதறி சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர்.

தருமபுரி மாவட்டம் கம்பைநல்லூர் அடுத்த வெதரம்பட்டி ஊராட்சி சின்ன முருக்கம்பட்டியில், ராசிபுரம் பகுதியைச் சேர்ந்த சின்னதுரை என்பவருக்கு சொந்தமான நாட்டு வெடிபொருள்கள் தயாரிக்கும் பட்டாசு குடோன் செயல்பட்டு வருகிறது. இங்கு நேற்று பிற்பகல் வழக்கம்போல குடோனில் செண்பகம், திருமலர், மஞ்சு உள்ளிட்ட நான்கு பெண்கள் பணியில் ஈடுபட்டுள்ளனர். இதில் ஒருவர் மதிய உணவுக்காக வெளியே சென்றார் என கூறப்படுகிறது.

அப்போது பிற்பகல் நேரத்தில் இந்த குடோனில் எதிர்பாராத விதமாக, வெடிபொருள்கள் வெடித்து சிதறியதில், குடோனில் வேலை செய்து கொண்டிருந்த செண்பகம், திருமலர், மஞ்சு ஆகிய 3 பெண்கள் உடல் சிதறி சம்பவ இடத்திலேயே பரிதாபமாக உயிரிழந்தனர். தீ விபத்து குறித்து தகவலறிந்து வந்த தீயணைப்பு துறையினர், தீப்பற்றி எரிந்த குடோன் பகுதியில் பரவிய தீயை அணைத்தனர்.

விபத்து குறித்து தகவலறிந்து அப்பகுதிக்கு வந்த கம்பை நல்லூர் பொலிஸார் விபத்து பகுதியில் திரண்டிருந்த பொதுமக்களை அப்புறப்படுத்தி, விபத்துக்கான காரணம் குறித்து விசாரித்து வருகின்றனர். பட்டாசு குடோனில் ஏற்பட்ட தீ விபத்தில் மூன்று பெண்கள் பலியான சம்பவம் அப்பகுதியில் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

# ஜேர்மனில் இடம்பெற்ற தேர்தலில் பழமைவாத கட்சி வெற்றி பெற்றது




நடந்து முடிந்த ஜேர்மன் தேர்தலில், பழமைவாத கட்சி 28.6 சதவீத வாக்குகளைப் பெற்று வெற்றி பெற்றுள்ளது.

இந்த நிலையில், ஜேர்மன் அரசியல் சட்டத்தின் கீழ், கட்சியின் தலைவர் பிரட்ரிக் மேர்ஸ் எதிர்வரும் 8 வார காலப்பகுதியில் கூட்டணி ஒன்றை உருவாக்கவுள்ளார் என தெரிவிக்கப்படுகிறது.

ஜேர்மனியின் தீவிர வலதுசாரி தரப்பினர் 20.8 சதவீதத்தினை பெற்று 2ஆவது நிலையில் உள்ளது.

இருப்பினும் வெற்றி பெற்றுள்ள பழமைவாத கட்சி தீவிர வலதுசாரியுடன் இணைந்து பணியாற்றுவது நிராகரிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், தோற்கடிக்கப்பட்ட ஜனாதிபதி ஒலாஃப் ஸ்கோல்சினின் ஜனநாயக கட்சி 16.4 சதவீத வாக்குகளை மட்டுமே பெற்று பெரும் பின்னடைவை எதிர்கொண்டுள்ளது.

ஐரோப்பா கண்டத்தில் உள்ள நாடுகளின் தலைவர்கள் கூட்டணியின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரட்ரிச் மேசிற்கு தொடர்ந்தும் வாழ்த்துகளைத் தெரிவித்து வருகின்றனர்.

இது தவிர, ஐரோப்பியக் கண்டத்திற்கு வெளியேயுள்ள நாடுகளின் தலைவர்களும் தமது வாழ்த்து செய்திகளைத் தெரிவித்துள்ளனர்.

இந்த நிலையில், பிரித்தானியாவிற்கான முன்னாள் ஜேர்மன் தூதுவர் தோமஸ் மட்டுசெக் ஜேர்மனியில் ஏற்பட்ட அரசியல் மாற்றம் ஆபத்தை ஏற்படுத்தும் வகையில் அமைந்துள்ளதாக எச்சரிக்கை விடுத்துள்ளார்.

# நிரந்தர போர் நிறுத்தத்திற்கான நேரம் இது: அன்டோனியோ குட்டரெஸ் கூறுகின்றார்



நிரந்தர போர் நிறுத்தத்திற்கான நேரம் இதுவென ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் அன்டோனியோ குட்டரெஸ் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 58 ஆவது கூட்டத்தொடரில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்தார்.

மனித குலத்தின் ஒக்சிஜன் மனித உரிமைகள் என அன்டோனியோ குட்டரெஸ் சுட்டிக்காட்டினார்.

காசா போர், உக்ரைன் போர், சூடானின் உள்நாட்டுப் போர் குறித்து தனது உரையில் குறிப்பிட்டிருந்தார்.

காசாவில் மக்கள் பாரிய சிரமத்தை எதிர்நோக்கியுள்ளனர் என அன்டோனியோ குட்டரெஸ் குறிப்பிட்டுள்ளார்.

மனித உரிமைகள் பேரவை உலகளாவிய ரீதியில் இடம்பெற்றுவரும் மனித உரிமை மீறல்களை உன்னிப்பாகக் கவனித்து வருவதாகவும் தெரிவித்துள்ளார்.







# யு.எஸ்.எய்ட்டில் பணியாற்றிய பணியாளர்களுக்கு விடுமுறை

யு.எஸ்.எய்ட் எனப்படும் சர்வதேச அபிவிருத்திக்கான அமெரிக்க முகவரகத்தின் பல பணியாளர்கள் நேற்று முன்தினம் நள்ளிரவு முதல் அமுலாகும் வகையில் அமெரிக்க அரசாங்கத்தினால் நிர்வாக விடுமுறையில் அனுப்பப்பட்டுள்ளனர்.

அதன்படி, சர்வதேச அபிவிருத்திக்கான அமெரிக்க முகவரகத்துக்கு பணியாற்றிய சுமார் 2 ஆயிரம் பணியாளர்களுக்கு இது குறித்து மின்னஞ்சல் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

சர்வதேச உதவி நிறுவனமான சர்வதேச அபிவிருத்திக்கான அமெரிக்க முகவரகத்தின் பணியாளர்களைக் குறைக்கவுள்ளதாக ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் சில வாரங்களுக்கு முன்னர் அறிவிப்பு விடுத்திருந்தார்.

எவ்வாறாயினும் இந்த நடவடிக்கையைச் சவாலுக்கு உட்படுத்திய அமெரிக்க பெடரல் நீதிமன்றம் ஒன்றில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.

அதற்கமைய அமெரிக்க அரசாங்கத்தின் இந்த திட்டம் நீதிமன்றினால் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டிருந்த போதிலும் கடந்த வெள்ளிக்கிழமை இந்த இடைநிறுத்தம் நிரந்தரமாக இருக்காது என உத்தரவிடப்பட்டிருந்தது.

# இன்றைய ராசி பலன்கள் -25.02.2025




இன்று அற்புதமான பலன்கள் கிடைக்கும்.உங்கள் இலக்குகளை முடிப்பதற்கு போதிய அவகாசம் கிடைக்கும். உங்கள் முகம் பிரகாசமாக இருக்கும். நீங்கள் பல ஆச்சரியங்களைக் காணலாம்.

பணியிடத்தில் உங்கள் திறமை பாராட்டப்படும். புதிய வேலை வாய்ப்புகளும் கிடைக்கும்.அது உங்களுக்கு மகிழ்ச்சியை அளிக்கும்.

உங்கள் துணையின் மீது அதிக ஆர்வம் காட்டுவீர்கள். உங்கள் துணையின் நம்பிக்கைக்கு பாத்திரமாவீர்கள்.

நிதிநிலைமையைப் பொறுத்தவரை இன்று அதிர்ஷ்டம் காணப்படும். பண விஷயத்தில் உங்கள் தரத்தை இன்று மேம்படுத்த முடியும்.

உங்களிடம் காணப்படும் ஆற்றலும் உற்சாகமும் உங்களை ஆரோக்கியமாக வைத்திருக்கும்.




இன்று சிறிது பதற்றத்துடன் காணப்படுவீர்கள். நீங்கள் எதையும் சகஜமாக எடுத்துக் கொண்டு சிறிது அனுசரித்து நடந்தால் அனைத்தும்சிறப்பாக இருக்கும். முக்கியமான முடிவுகள் எடுப்பதை தவிர்க்கவும்.

பணியிடச் சூழல் மகிழ்ச்சிகரமானதாக இருக்காது. உங்கள் சகபணியாளர்களுடன் சூடான விவாதம் காணப்படும். பணிகளின் சுமை அதிகரித்துக் கொண்டேயிருக்கும்.

உங்கள் இருவருக்கும் இடையே புரிந்துணர்வு குறைந்து காணப்படும். எனவே உங்கள் துணையுடன் ஒரு விவாதத்தில் ஈடுபடுவீர்கள்.

இன்று உங்களின் அஜாக்கிரதை மற்றும் கவனக் குறைவு காரணமாக பண இழப்புகளை சந்திப்பீர்கள்.

செரிமானக் கோளாறுகள் ஏற்பட வாய்ப்புள்ளது.




மிதுனம்

உங்கள் பதற்றத்தை எப்படி குறைப்பதென்பதை கற்றுக்கொள்ளுங்கள். எந்தவிதமான எதிர்மறை எண்ணத்துக்கும் இடம் கொடுக்காதீர்கள். நீங்கள்அற்புதங்களைப் புரிவீர்கள் என்று நினைத்துக் கொள்ளுங்கள்.

உங்கள் பணிகளை நம்பிக்கையுடன் மேற்கொள்வீர்கள். தடைகளை சமாளித்து உங்கள் பணிகளை குறித்த நேரத்தில் முடிப்பீர்கள்.

உங்களின் வித்தியாசமான அணுகுமுறையை உங்கள் துணையிடம் வெளிபடுத்துவீர்கள். இது உங்கள் இருவருக்கும் இடையேயான உறவை பாதிக்கும். நன்கு புரிந்து கொள்வதன் மூலம் நன்மை கிடைக்கும்.

இன்று அதிகரித்து காணப்படும் பொறுப்புகள் காரணமாக பணம் செலவு செய்ய வேண்டிய கட்டாயத்திற்கு ஆளாவீர்கள்.இன்று அதிக பணம் சேமிக்க இயலாது.




பதற்றம் காரணமாகச் சில சௌகரிங்களை இழப்பீர்கள். உங்களை சகஜமாக வைத்திருக்க இசையைக் கேளுங்கள் அல்லது திரைப்படம் போன்ற பொழுது போக்கு நிகழ்ச்சிகளைப் பாருங்கள். அது உங்களுக்கு மகிழ்ச்சியைத் தரும்.

பணிகள் அதிகமாக காணப்படும். பணிகளை முடிக்க உங்களுக்கு அளிக்கப்பட்ட நேரம் போதாது என்று நீங்கள் நினைப்பீர்கள். திட்டமிடுவதன் மூலம் சிறிது எளிதாக பணிகளை முடிக்கலாம்.

உங்கள் மனதில் தேவையற்ற எண்ணங்கள் காணப்படும். இதை உங்கள் துணையிடம் வெளிப்படுத்துவீர்கள். இதனால் மகிழ்ச்சி குறையும்.

இன்று உங்களிடம் குறைந்த அளவு பணமே காணப்படும். உங்கள் குடும்பத்துக்காகப் பணம் செலவு செய்ய நேரும்.




விஷயங்கள் அனைத்தும் சுமுகமாக நடக்கும் உங்கள் தன்னம்பிக்கை அதிகரித்து இருப்பதன் காரணமாக உங்கள் வளர்ச்சி சாத்தியப்படும். இன்றைய நாளை நீங்கள் மகிழ்ச்சியுடன் அனுபவிப்பீர்கள்.

இன்று மகிழ்ச்சியான நாளாக இருக்கும். இன்று ஊக்கத் தொகையும் சலுகையும் கிடைக்க வாய்ப்பு உள்ளது. பணியைப் பொறுத்தவரை இன்று மகிழ்ச்சியான நாளாக இருக்கும்.

உங்கள் துணையிடம் இனிமையாகப் பழகுவீர்கள். அவரிடம் நேர்மையாக இருப்பீர்கள். குடும்ப முன்னேற்றம் குறித்த பயனுள்ள விவாதம் நடக்கும்.

இன்று உங்களுக்கு அதிர்ஷ்டமான நாள். இன்று உங்கள் வங்கியிருப்பு அதிகரிக்கும். இது உங்களுக்கு மகிழ்ச்சியை அளிக்கும்.




உங்கள் விருப்பங்களை நிறைவேற்றும் வகையில் பணிகளை நீங்கள் மேற்கொள்ளலாம்.முக்கியமான முடிவுகள் இன்று நல்ல பலன்களைத் தரும்.நீங்கள் நம்பிக்கையுடன் இருப்பீர்கள். உங்களிடம் நகைச்சுவை உணர்வு காணப்படும். உங்களுக்குப் பிரியமானவர்கள் உங்களின் இந்த குணங்களைப் பாராட்டுவார்கள்.

குறைந்த நேரத்தில் பணிகளை விரைந்து முடிப்பீர்கள். இது உங்கள் சக பணியாளர்களின் கவனத்தை ஈர்க்கும். உங்களுக்கென தனிப்பாணி அமைத்துக் கொள்வீர்கள். உங்கள் திறமைகளைக் கொண்டு பணியை எளிதில் முடிப்பீர்கள்.

உங்கள் துணையிடம் காதல் உணர்வை வெளிப்படுத்துவீர்கள். உங்களின் மகிழ்ச்சியான மன நிலையை அவர் தெளிவாகப் புரிந்துகொள்வார்.




இன்று பலன்கள் கலந்து காணப்படும். அமைதியுடனும் பொறுமையுடனும் இருக்க வேண்டும். அதிர்ஷ்டம் உங்களுக்கு சாதகமாக இல்லை. உங்கள் முயற்சி தான் உங்களுக்கு புகழை பெற்றுத் தரும்.

பணிச்சுமை அதிகமாக காணப்படும். நீங்கள் ஒப்புக் கொண்ட வேலைகளை குறித்த நேரத்தில் முடிப்பதற்கு இன்றைய நாளை திட்டமிடுங்கள்.

உங்களிடம் நுண் உணர்வு மேலோங்கி காணப்படும். எனவே உங்கள் துணையுடன் பேசுவதை தவிர்க்கவும்.

உங்களிடம் குறைவான பணமே காணப்படும். பணப் புழக்கம் குறைந்து காணப்படும். பொறுப்புகள் அதிகமாக இருக்கும். உங்களிடம் உள்ள பணத்தைக் கொண்டு இன்றைய நாளை புத்திசாலித்தனத்துடன் கையாள வேண்டும்.




இன்று பதற்றம் ஏற்பட வாய்ப்புள்ளதால் அமைதியாக இருக்க வேண்டும். சிறந்த இசை கேட்பதன் மூலம் ஆறுதல் கிடைக்கும். உணர்ச்சி வசப்படாமல் இருக்க வேண்டும். முக்கிய முடிவுகள் எடுப்பதை தவிர்க்க வேண்டும்.

இன்று பணியிடச் சூழல் சிறப்பாக இருக்காது. உங்கள் சக பணியாளர்களுடன் அல்லது உங்கள் கீழ் பணிபுரிபவர்களுடன் நல்லுறவு காணப்படாது.

இன்று மனக் குழப்பம் காணப்படும். இதனை உங்கள் துணையிடம் காண்பிப்பீர்கள். மகிழ்ச்சியாக இருக்க இந்தப் போக்கை தவிர்க்க வேண்டும்.

உங்கள் பணத் தேவைகளை பூர்த்தி செய்துகொள்ள இன்று உகந்த நாள் அல்ல. நிதி வளர்ச்சியில் இன்று சில கட்டுப்பாடுகளை சந்திக்க நேரும். இது உங்களுக்கு கவலையை உண்டாக்கும்.

# இன்றைய ராசி பலன்கள் -25.02.2025




இன்று சற்று மந்தமான நாளாக காணப்படும். உங்கள் செயல்களை புத்திசாலித்தனமாக செய்ய வேண்டும். இன்று உங்கள் செயல்களில் தவறுகள் செய்ய வாய்ப்புள்ளது.

இன்று பணிகளைக் கையாள்வதை கடினமாக உணர்வீர்கள். கட்டுப்பாடற்ற சூழல் காரணமாக பணியில் மிகப் பெரிய தவறுகள் நேர வாய்ப்புள்ளது.

துணையுடன் தேவையற்ற வாக்குவாதங்கள் எழலாம். அதனை தவிர்க்க அவேண்டும். மகிழ்ச்சியைக் காண அனுசரித்து நடந்து கொள்ள வேண்டும்.

இன்று தேவையற்ற செலவுகளை சமாளிக்க நேரும். இதனால் கவலை ஏற்படும். பண இழப்பு ஏற்படவும் வாய்ப்புள்ளது.

இன்று முதுகு வலி ஏற்பட வாய்ப்புள்ளது.




புதிய தொடர்புகள் ஏற்படுத்திக் கொள்வதற்கு இன்று உகந்த நாள். உங்கள் முயற்சிகள் அனைத்தும் இன்று பலிக்கும். உங்கள் தன்னம்பிக்கை அதிகரிக்கும். உங்கள் பணிகள் அனைத்தையும் எளிதில் ஆற்றுவீர்கள்.

பணியிடத்தில் சிறப்பாக பணியாற்றி நற்பெயரை எடுப்பீர்கள். உங்கள் புதுமையான கருத்துக்கள் உங்கள் மேலதிகாரிகளால் பாராட்டப்படும்.

உங்கள் துணையிடம் நேர்மையான அணுகுமுறை கொண்டிருப்பீர்கள். துணையுடனான உறவை ஒரு புதிய நிலைக்கு மாற்றுவீர்கள்.

இன்று கணிசமான தொகை சம்பாதிப்பீர்கள். இன்று பணம் சேமிப்பதற்கான அதிர்ஷ்டம் உள்ளது.

இன்று ஆற்றலுடனும் தைரியத்துடனும் காணப்படுவீர்கள். உங்கள் ஆரோக்கியம் சிறந்து காணப்படும்.




வெவ்வேறு விஷயங்களில் உங்களிடம் சமநிலையான கருத்து காணப்படும்.உங்களுக்கு நிறைய வாய்ப்புகள் கிடைக்கும்.அது உங்களுக்கு மகிழ்ச்சியை அளிக்கும்.முக்கியமான முடிவுகள்எடுப்பதற்கு இன்று உகந்த நாள்.

உங்கள் பணிகளை சுமுகமாக செய்து முடிப்பீர்கள்.கடினமான பணிகளைக் கூட இன்று எளிதாகவும் விரைவாகவும் செய்து முடிப்பீர்கள்.

இன்று உங்களிடம் இனிமையான உணர்வு காணப்படும். நேர்மறையான எண்ணம் காணப்படும். எனவே உங்கள் உணர்வுகளை உங்கள் துணையிடம் வெளிப்படுத்துங்கள்.

இன்று நிதிநிலைமை சிறப்பாக காணப்படும். உங்களிடம் கணிசமான தொகை காணப்படும்.




சூழ்நிலை உங்களுக்கு சாதகமாக இருக்காது. உங்கள் தினசரி செயல்களை செய்வதை கடினமாக உணர்வீர்கள். முக்கிய முடிவுகள் எடுப்பதை தவிர்க்கவும். எந்த விஷயத்தையும் லேசாக எடுத்துக் கொள்ளவும். அமைதியாக இருக்கவும்.

உங்கள் பணியில் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும். இன்று முன்னுரிமைப் படி பணிகளை அமைத்து செயல்படுவது அவசியம்.

உங்கள் மனதில் காணப்படும் குழப்பம் காரணமாக உங்கள் துணையை புரிந்துகொள்வது உங்களுக்கு கடினமாக இருக்கும். குழப்பத்தை விட்டுத் தெளிவான மனதுடன் பேசுவதன் மூலம் இருவருக்கும் இடையே நல்லுறவு ஏற்படும்.

இன்று அதிக பணம் சம்பாதிக்க இயலாது.

